# தமிழ்நாடு அரசு

# பள்ளிக்கல்வித் துறை

# திருவாரூர் மாவட்டம்

## வகுப்பு 12

# இயற்பியல்

Padasalai

ஆக்கம்

மு.ரமேஷ்,M.Sc.,B.Ed.,M.Phil.,

முதுகலை ஆசிரியர்

கூட்டுறவு அர்பன் நகராட்சி மேல்நிலைப் பள்ளி.

மன்னார்குடி-614001

திருவாரூர் மாவட்டம்



Scanned with OKEN Scanner

# மெல்ல கற்போருக்கான கையேடு

*நிலை மின்னியல் மற்றும் காந்தவியல் பாடப்பகுதிகள் ஒப்பிடப்பட்டு 2,3 மற்றும் 5 மதிப்பெண் வினா விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

*முதல் மூன்று அலகுகள் , முதல் இடைப் பருவத் தேர்வு முதல், முழு ஆண்டு பொதுத்தேர்வு வரை (காலாண்டு, அரையாண்டு உட்பட) மற்ற பாடங்களோடு சேர்ந்து வரும் என்பதால் அதிக வினா விடைகள் இப்பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

*ஒவ்வொரு 5 மதிப்பெண் மற்றும் 3 மதிப்பெண் வினா விடைகளுக்கு மதிப்பெண் பங்கீடு கொடுக்கப்பட்டுள்ளது.

Padasalai

*அணைத்து 5 மற்றும் 3 மதிப்பெண் வினா-விடைகளுக்கு மாணவர்கள் புரிந்துக்கொண்டு படிப்பதற்கு ஏதுவாக வீடியோ விளக்கம் , கொடுக்கப்பட்டுள்ள QR code ஐ SCAN செய்வதன் மூலம் பெறலாம்.

* 2 மற்றும் 3 மதிப்பெண் வினா விடைகள் ,

1)வேறுபாடுகள்

2)பண்புகள்

3)பயன்கள்

4)விதிகள் மற்றும் வரையறைகள்

5) ஏன்? - **போன்ற பிரிவுகளாக கொடுக்கப்பட்டுள்ளது**



Scanned with OKEN Scanner

Padasalai

Scanned with OKEN Scanner

**நிலை மின்னியல் கூலும் விதி**

இரு மின்னூட்டங்களுக்கு இடையேயான கவர்ச்சி விசை அல்லது விலக்கு விசை அவற்றின் பெருக்கற்பலனுக்கு நேர்த்தகவிலும், அவற்றிற்கு இடையேயான தொலைவின் இருமடிக்கு எதிர்த்தக விலும் இருக்கும்.

$$F \propto \frac{q_1 q_2}{r^2} \quad \text{------ (1)}$$

PCB For U

**மின்புலம் வரையறு**

ஒரு மின்னூட்டத்தைச் சுற்றியுள்ள பகுதி அல்லது வெளியில் அம்மின்னூட்டத்தின் தாக்கம் வேறொரு மின்னூட்டத்தால் உணரப்பட்டால் ,அம்மின்னூ ட்டத்தைச் சுற்றியுள்ள பகுதி அல்லது வெளி மின்புலம் எனப்படும்.

Padasalai

**மின்புலச் செறிவு – வரையறு**

மின்புலத்தில் உள்ள ஒரு புள்ளியில் வைக்கப்பட்டுள்ள ஓரலகு மின்னூட்டம் உணரும் விசையே, அப்புள்ளியில் மின்புலச் செறிவு எனப்படும்.

$$\vec{E} = \frac{\vec{F}}{q_0}$$ அலகு $NC^{-1}$

**மின்புலக் கோடுகள் என்றால் என்ன?**

மின்புலத்தில் ஓரலகு நேர் மினூட்டம் நகர முயற்சிக்கும் நேரான அல்லது வளைவான பாதையே மின்புலக் கோடுகள் எனப்படும்

**காந்தவியல் கூலும் விதி**

இரு காந்த முனைகளுக்கு இடையேயான கவர்ச்சி விசை அல்லது விலக்கு விசை அவற்றின் முனை வலிமைகளின் பெருக்கற்பலனுக்கு நேர்த்தகவிலும் அவற்றிற்கு இடையேயான தொலைவின் இருமடிக்கு எதிர்த்தகவிலும் இருக்கும்.

$$\vec{F} \propto \frac{q_{m_A} q_{m_B}}{r^2} \hat{r}$$

**காந்தப் புலம் வரையறு**

ஒரு காந்ததைச் சுற்றியுள்ள பகுதி அல்லது வெளியில் அக்காந்தத்தின் தாக்கம் வேறொரு காந்தத்தால் உணரப்பட்டால் அக்காந்தத்தைச் சுற்றியுள்ள பகுதி அல்லது வெளி காந்தப்புலம் எனப்படும்.

**காந்தப்புலச் செறிவு – வரையறு**

காந்தப்புலத்தில் உள்ள ஒரு புள்ளியில் வைக்கப்பட்டுள்ள ஓரலகுகாந்த முனை வலிமை உணரும் விசையே அப்புள்ளியில் காந்தப்புலச் செறிவு எனப்படும்.

$$\vec{B} = \frac{1}{q_m}\vec{F}$$ அலகு $N A^{-1} m^{-1}$.

**காந்தப்புலக் கோடுகள் என்றால் என்ன?**

காந்தப் புலத்தில் ஓரலகு காந்த முனை வலிமை கொண்ட காந்தம் ஒன்று நகர முயற்சிக்கும் நேரான அல்லது வளைவான பாதையே காந்தப்புலக் கோடுகள் எனப்படும்.

M.RAMESH,M,Sc.,B.Ed.,M.Phil;., PG Assistant ,Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi Thiruvarur District



Scanned with OKEN Scanner

**மின்புலக் கோடுகளின் பண்புகள் --(3)**

*நேர் மின்னூட்டத்தில் தொடக்கி எதிர் மின்னூட்டத்தில் முடிவடையும்
*ஒன்றையொன்று வெட்டிச் செல்லாது
*மின்புலக் கோட்டிற்கு ஒரு புள்ளியில் வரையப்படும் தொடுகோட்டின் திசையில் மின்புல வெக்டர் அமையும். *எந்தவொரு பகுதியில் மின்புலத்தின் செறிவு அதிகமாக உள்ளதோ அங்கு மின்புலக் கோடுகள் நெருக்கமாகவும் எங்கு மின்புலச் செறிவு குறைவாக உள்ளதோ அங்கு அவை இடைவெளி விட்டும் அமையும்.
*ஒரு நேர் மின்துகளிலிருந்து வெளிநோக்கிச் செல்லும் மின்புலக் கோடுகளின் எண்ணிக்கை அல்லது எதிர் மின்துகளில் முடிவடையும் மின்புலக் கோடுகளின் எண்ணிக்கையானது அந்த மின்துகளின் மின்னூட்ட மதிப்பிற்கு நேர்த்தகவில் இருக்கும்.

**மின் இருமுனைத் திருப்புத் திறன் என்றால் என்ன? அலகு யாது?** மின்

*இரு முனையில் உள்ள மின் துகள்களுள் ஏதேனும் ஒன்றின் மின்னூட்ட மதிப்பினை அவற்றிற்கு இடையே உள்ள தொலைவினால் பெருக்கக் கிடைப்பது ஆகும். $p = q \times 2a$
*அலகு C m

PCB For U

**மின்பாயம் வரையறு.**

மின்புலக் கோடுகளுக்கு குறுக்கே அமைந்த குறிப்பிட்ட பரப்பின் வழியே பாயும் மின்புலக் கோடுகளின் எண்ணிக்கை மின்பாயம் எனப்படும்.

அலகு $Nm^{2}C^{-1}$

**காந்தப்புலக் கோடுகளின் பண்புகள்**

*வட முனையில் தொடங்கி தென் முனையில் முடிவடையும்.
*ஒன்றையொன்று வெட்டிச் செல்லாது
*காந்தப்புலக் கோட்டிற்கு ஒரு புள்ளியில் வரையப்படும் தொடுகோட்டின் திசையில் காந்தப்புல வெக்டர் அமையும்.
*எந்தவொரு பகுதியில் காந்தப்புலத்தின் செறிவு அதிகமாக உள்ளதோ அங்கு காந்தப்புலக் கோடுகள் நெருக்கமாகவும், எங்கு காந்தப்புலச் செறிவு குறைவாக உள்ளதோ அங்கு அவை இடைவெளி விட்டும் அமையும்.
*வட முனையிலிருந்து வெளிநோக்கிச் செல்லும் காந்தப்புலக் கோடுகளின் எண்ணிக்கை அல்லது தென் முனையில் முடிவடையும் காந்தப்புலக் கோடுகளின் எண்ணிக்கையானது அந்த காந்தத்தின் காந்த முனை வலிமை மதிப்பிற்கு நேர்த்தகவில் இருக்கும்.

**காந்த இருமுனைத் திருப்புத் திறன் என்றால் என்ன? அலகு யாது?**

சட்ட காந்தத்தில் உள்ள காந்த முனைகளில் ஏதேனும் ஒன்றின் காந்த முனை வலிமை மற்றும் காந்தத்தின் நீளம் ஆகியவற்றின் பெருக்கற்பலனே காந்த இரு முனைத் திருப்புத் திறன் எனப்படும். $p_m = q_m \times 2l$
*அலகு $Am^2$

**காந்தப் பாயம் வரையறு**

காந்தப்புலக் கோடுகளுக்கு குறுக்கே அமைந்த குறிப்பிட்ட பரப்பின் வழியே பாயும் காந்தப்புலக் கோடுகளின் எண்ணிக்கை காந்தப் பாயம் எனப்படும்.

அலகு Wb

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co- Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

*மின் இருமுனை ஒன்றினால் அச்சுக் கோட்டில் உள்ள ஒரு புள்ளியில் மின்புலம் காண்பதற்கான கோவையைத் தருவி




*AB-இருமுனை ; OC = r :CA =( r + a) ;

BC = (r-a); ------ (1)

* + q வினால் மின்புலச்செறிவு

$$\vec{E}_+ = \frac{1}{4\pi\varepsilon_0}\frac{q}{(r-a)^2}\hat{p}$$ ------- (1/2)

* -q வினால் மின்புலச்செறிவு

$$\vec{E}_- = -\frac{1}{4\pi\varepsilon_0}\frac{q}{(r+a)^2}\hat{p}$$ --------- (1/2)

PCB For U

$$\vec{E}_{tot} = \vec{E}_+ + \vec{E}_-$$

$$\vec{E}_{tot} = \frac{1}{4\pi\varepsilon_0}\frac{q}{(r-a)^2}\hat{p} - \frac{1}{4\pi\varepsilon_0}\frac{q}{(r+a)^2}\hat{p}$$

$$\vec{E}_{tot} = \frac{1}{4\pi\varepsilon_0}q\left(\frac{4ra}{(r^2-a^2)^2}\right)\hat{p}$$ --(1)

$$2aq\hat{p} = \vec{p}$$ ----(1/2)

$$\vec{E}_{tot} = \frac{1}{4\pi\varepsilon_0}\frac{2\vec{p}}{r^3} \quad (r >> a)$$ ----- (1)

*நிகர மின்புலச்செறிவின் திசை மின் இருமுனைத் திருப்புத்திறன் திசையிலேயே அமையும். --- (1/2)

காந்த இருமுனையின் அச்சுக்கோட்டில் உள்ள ஒரு புள்ளியில் காந்தப்புலம் காண்பதற்கான கோவையைத்தருவி




SN−சட்ட காந்தம் (காந்த இருமுனை)

OC = r; CS= (r + $l$); NC=(r−$l$) ----(1) *வட முனையால் காந்தப்புலச் செறிவு

$$\vec{B}_N = \frac{\mu_0}{4\pi}\frac{q_m}{(r-l)^2}\hat{p}_m$$ ----(1/2)

*தென்முனையால் காந்தப்புலச்செறிவு

$$\vec{B}_S = -\frac{\mu_0}{4\pi}\frac{q_m}{(r+l)^2}\hat{i}\ \hat{p}_m$$ -------(1/2)

$$\vec{B} = \vec{B}_N + \vec{B}_S$$

$$\vec{B} = \frac{\mu_0 q_m}{4\pi}\left(\frac{1}{(r-l)^2} - \frac{1}{(r+l)^2}\right)\hat{p}_m$$

$$\vec{B} = \frac{\mu_0 2r}{4\pi}\left(\frac{q_m\cdot(2l)}{(r^2-l^2)^2}\right)\hat{p}_m$$ --- (1)

$$2aq\hat{p}_m = \vec{p}_m$$ ------- (1/2)

$$\vec{B}_{அச்சு} = \frac{\mu_0}{4\pi}\frac{2}{r^3}\vec{p}_m$$ (r >> $l$) --- (1)

*நிகர காந்தப்புலச்செறிவின் திசை காந்த இருமுனைத் திருப்புத் திறன் திசையிலேயே அமையும். ------ (1/2)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co- Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

***மின் இருமுனையின் நடுவரைக்கோட்டில் உள்ள புள்ளியில் மின்புலம் காண்பதற்கான கோவையைத் தருவி**




------ (1)

*AB –மின் இருமுனை;OC -= r ; BC = C A ; OA =OB = a*

$$\left|\vec{E}_+\right| = \left|\vec{E}_-\right| = \frac{1}{4\pi\varepsilon_0}\frac{q}{\left(r^2+a^2\right)}$$ ----(1)

$$\vec{E}_{tot} = -\left|\vec{E}_+\right|\cos\theta\,\hat{p} - \left|\vec{E}_-\right|\cos\theta\,\hat{p}$$

$$\vec{E}_{tot} = -2\left|\vec{E}_+\right|\cos\theta\,\hat{p}$$ ----(12/)

$$\vec{E}_{tot} = -\frac{1}{4\pi\varepsilon_0}\frac{2q\cos\theta}{\left(r^2+a^2\right)}\hat{p}$$

$$\cos\theta = \frac{a}{\sqrt{r^2+a^2}}$$ ---------(1/2)

$$\vec{E}_{tot} = -\frac{1}{4\pi\varepsilon_0}\frac{2qa}{\left(r^2+a^2\right)^{\frac{3}{2}}}\hat{p}$$

$$\vec{p} = 2qa\hat{p}$$ ------- (1/2)

$$\vec{E}_{tot} = -\frac{1}{4\pi\varepsilon_0}\frac{\vec{p}}{r^3} \qquad (r>>a)$$ -----(1)

*நிகர மின்புலச்செறிவின் திசையானது ,மின் இருமுனைத் திருப்புத் திறனின் திசைக்கு எதிர்த்திசையில் இருப்பதை எதிர்க்குறி குறிக்கிறது ------ (1/2)

PCB For U

***காந்த இருமுனையின் நடுவரைக் கோட்டில் உள்ள புள்ளியில் காந்தப்புலம் காண்பதற்கான கோவையைத் தருவி**




---- (1)

*SN – சட்ட காந்தம்; OC = r ; NC =CS*

$$\left|\vec{B}_N\right| = \left|\vec{B}_S\right| = \frac{\mu_\circ}{4\pi}\frac{q_m}{(r^2+l^2)}$$ -------- (1)

$$\vec{E}_{tot} = -\left|B_N\right|\cos\theta\,\hat{p}_m - \left|B_S\right|\cos\theta\,\hat{p}_m$$

$$\vec{B}_{tot} = -2\left|B_N\right|\cos\theta\,\hat{p}_m$$ ------(1/2)

$$\vec{B}_{tot} = -\frac{\mu_\circ}{4\pi}\frac{2q_m\cos\theta}{(r^2+l^2)}\hat{p}_m$$

$$\cos\theta = \frac{l}{(r^2+l^2)^{\frac{1}{2}}}$$ ---------(1/2)

$$\vec{B} = -\frac{\mu_\circ}{4\pi}\frac{q_m\times(2l)}{(r^2+l^2)^{\frac{3}{2}}}\hat{p}_m$$

$$\vec{P}_m = q_m\times(2l)\hat{P}_m$$ ------ (1/2)

$$\vec{B}_{நடுவரை} = -\frac{\mu_\circ}{4\pi}\frac{\vec{p}_m}{r^3}$$ ( r>> l) -----(1)

*நிகர காந்தப்புலத்தின் திசையானது காந்த இருமுனைத்திருப்புத் திறன் திசைக்கு எதிர் திசையில் அமையும் என்பதை எதிர்க்குறி குறிக்கிறது-------- (1/2)

*M.RAMESH, M.Sc.,B,Ed., M.Phil., P.G.Assistant, Co-Operative Urban Municipal Higher Secondary School,Mannargudi,Thiruvarur District*



Scanned with OKEN Scanner

## சீரான மின்புலத்தில் உள்ள மின் இருமுனையின் மீது செயல்படும் திருப்பு விசைக்கான கோவையைப் பெறுக




**மொத்த திருப்புவிசையின் எண்மதிப்பு**

$$|\vec{\tau}| = |\overrightarrow{OA}||(-q\vec{E})|\sin\theta + |\overrightarrow{OB}||q\vec{E}|\sin\theta$$

$$\tau = a \times qE \sin\theta + a \times qE \sin\theta$$

$$\tau = qE \cdot 2a\sin\theta$$

$$p = 2aq$$

$$\tau = pE\sin\theta$$

வெக்டர் வடிவில் $\vec{\tau} = \vec{p} \times \vec{E}$

$\theta = 90^\circ$ எனில் $\tau = pE$

## சீரான காந்தப்புலத்தில் உள்ள மின் இருமுனை மீது செயல்படும் திருப்பு விசைக்கான கோவையைப் பெறுக




மொத்த திருப்பு விசையின் எண் மதிப்பு

$$|\vec{\tau}| = |\overrightarrow{OS}||(-q_m\vec{B})|\sin\theta + |\overrightarrow{ON}||(q_m\vec{B})|\sin\theta$$

$$\tau = l \times q_m B\sin\theta + l \times q_m B\sin\theta$$

$$\tau = 2l \times q_m B\sin\theta$$

$$q_m \times 2l = p_m$$

$$\tau = p_m B\sin\theta$$

வெக்டர் வடிவில், $\vec{\tau} = \vec{p}_m \times \vec{B}$

$\theta = 90^\circ$ $\tau = pE$

PCB For U
Padasalai



Scanned with OKEN Scanner

## சீரான மின்புலத்தில் உள்ள மின் இருமுனையின் நிலை மின்னழுத்த ஆற்றலை விவரி




------ (1)

மாறாத கோண திசைவேகத்துடன் மின் இருமுனையைச் சுழலச் செய்ய திருப்பு விசையால் செய்யப்படும் வேலை

$$W = \int_{\theta'}^{\theta} \tau_{ext} d\theta$$ -------- (1/2)

$$|\vec{\tau}_{ext}| = pE\sin\theta$$

$$W = \int_{\theta'}^{\theta} pE\sin\theta\, d\theta$$

$$W = pE(\cos\theta' - \cos\theta)$$

U = - pE (cos θ – cos θ') ----- (1/2)

தொடக்கக் கோணம் $\theta' = 90^\circ$ என்றும் இதையே சுட்டுப்புள்ளியாகவும் (reference point) எடுத்துக்கொண்டால்

$$U = -pE\cos\theta$$ -------- (1/2)

$$U = = -\vec{p}\cdot\vec{E}$$ --------- (1/2)

## சீரான காந்தப்புலத்தில் உள்ள காந்த இருமுனையின்/சட்ட காந்தமொன்றின் நிலையாற்றல்




-------- (1)

மாறாத கோண திசைவேகத்துடன் சட்ட காந்தத்தை சுழலச் செய்ய திருப்பு விசையால் செய்யப்படும் வேலை

$$W = \int_{\theta'}^{\theta} \tau_{ext} d\theta$$ ----------- (1/2)

$$|\vec{\tau}_{புற}| = p_m B\sin\theta$$

$$W = \int_{\theta'}^{\theta} p_m B\sin\theta\, d\theta$$

$$W = p_m B(\cos\theta' - \cos\theta)$$

$$U = -p_m B(\cos\theta - \cos\theta')$$ ---- (1/2)

தொடக்கக் கோணம் $\theta' = 90^\circ$ என்றும் இதையே சுட்டுப்புள்ளியாகவும் (reference point) எடுத்துக்கொண்டால்

$$U = -p_m B(\cos\theta)$$ ------- (1/2)

$$U = -\vec{p}_m \cdot \vec{B}$$ ---------- (1/2)

PCB For U



Scanned with OKEN Scanner

## மின் இருமுனையால் ஏதேனும் ஒரு புள்ளியில் மின்னழுத்தம் காண்பதற்கான கோவையைத் தருவி




*மின் இருமுனையின் மையம் O லிருந்து r தொலைவில் உள்ள புள்ளி P-யைக் கருதுக. *

கோணம் $BOP = \theta$, கோணம் $AOP = (180-\theta)$ என்க.

+q மின் துகளினால் புள்ளி P ல் மின்னழுத்தம் $= \frac{1}{4\pi\varepsilon_\circ}\frac{q}{r_1}$

-q மின் துகளினால் புள்ளி P ல் மின்னழுத்தம் $= -\frac{1}{4\pi\varepsilon_\circ}\frac{q}{r_2}$

புள்ளி P ல்உருவாகும் மொத்த மின்னழுத்தம்

$$V = \frac{1}{4\pi\varepsilon_\circ} q\left(\frac{1}{r_1} - \frac{1}{r_2}\right) \text{------(1)}$$

BOP முக்கோணத்தில் கொசைன் விதியைப் பயன்படுத்த

$$r_1^2 = r^2 + a^2 - 2ra\cos\theta$$

$$r_1^2 = r^2\left(1 + \frac{a^2}{r^2} - \frac{2a}{r}\cos\theta\right)$$

$\frac{a^2}{r^2}$ ஐ புறக்கணித்து இருபுறமும் வர்க்கமூலம் எடுக்க

$$\frac{1}{r_1} = \frac{1}{r}\left(1 - \frac{2a}{r}\cos\theta\right)^{-\frac{1}{2}}$$

PCB For U

ஈருறுப்பு கோவையைப் பயன்படுத்த

$$\frac{1}{r_1} = \frac{1}{r}\left(1 + \frac{a}{r}\cos\theta\right) \text{----------(1/2)}$$

முக்கோணம் AOP ல் கொசைன் விதியைப் பயன்படுத்த,,

$$r_2^2 = r^2 + a^2 - 2ra\cos(180-\theta)$$

$$r_2^2 = r^2 + a^2 + 2ra\cos\theta$$

$$r_2^2 = r^2\left(1 + \frac{2a\cos\theta}{r}\right)$$

தலைகீழ் மதிப்பெடுத்து ஈருறுப்பு கோவையைப் பயன்படுத்த,

$$\frac{1}{r_2} = \frac{1}{r}\left(1 - a\frac{\cos\theta}{r}\right) \text{------- (1/2)}$$

$$V = \frac{1}{4\pi\varepsilon_\circ} q\left(\frac{1}{r}\left(1 + a\frac{\cos\theta}{r}\right) - \frac{1}{r}\left(1 - a\frac{\cos\theta}{r}\right)\right)$$

$$V = \frac{q}{4\pi\varepsilon_\circ}\left(\frac{1}{r}\left(1 + a\frac{\cos\theta}{r} - 1 + a\frac{\cos\theta}{r}\right)\right)$$

$$V = \frac{1}{4\pi\varepsilon_\circ}\frac{2aq}{r^2}\cos\theta$$

$$V = \frac{1}{4\pi\varepsilon_0}\left(\frac{p\cos\theta}{r^2}\right) \text{------- (1)}$$

$V = \frac{1}{4\pi\varepsilon_0}\frac{p}{r^2}$ ($\theta=0$ எனில்)

$V = 0$ ($\theta=90^0$ எனில்)

$V = -\frac{1}{4\pi\varepsilon_0}\frac{p}{r^2}$ ($\theta=180^0$ எனில்) -----(1)

(

Padasalai



Scanned with OKEN Scanner

## மின்னூட்டம் பெற்ற முடிவிலா நீளம் உடைய கம்பியினால் ஏற்படும் மின்புலத்திற்கான கோவையைப் பெறுக




$$\Phi_E = \oint \vec{E}\cdot d\vec{A}$$

$$= \int_{\text{வளை பரப்பு}} \vec{E}\cdot d\vec{A} + \int_{\text{மேற் பரப்பு}} \vec{E}\cdot d\vec{A} + \int_{\text{அடிப் பரப்பு}} \vec{E}\cdot d\vec{A}$$ -----------(1)

வளைப்பரப்பில் $\vec{E}$ ஆனது $\vec{A}$ க்கு இணையாக உள்ளதால் θ= 0 , Cos(0) = 1 $\vec{E}\cdot d\vec{A} = E\,dA$.

மேல் மற்றும் அடிப்பரப்புகளுக்கு $\vec{E}$ ஆனது $\vec{A}$ விற்கு செங்குத்தாக உள்ளதால், $\vec{E}\cdot d\vec{A} = 0$ ----(1/2)

----(1) $Q_{\text{உள்}} = \lambda L$ ------ (1/2)

$$E \int_{\text{வளை பரப்பு}} dA = \frac{\lambda L}{\varepsilon_0}$$ ----------(1/2)

$$E\cdot 2\pi r L = \frac{\lambda L}{\varepsilon_0}$$

Padasalai PCB For U

$$E = \frac{1}{2\pi\varepsilon_0}\frac{\lambda}{r}$$

வெக்டர் வடிவில், $\vec{E} = \frac{1}{2\pi\varepsilon_0}\frac{\lambda}{r}\hat{r}$ --------(1)

$\lambda > 0$ எனில், கம்பிக்கு செங்குத்தாக வெளிநோக்கிய திசையில் $\vec{E}$ இருக்கும்; $\lambda < 0$ எனில், உள்நோக்கிய திசையில் $(-\hat{r})$ செங்குத்தாக $\vec{E}$ இருக்கும். ----- (1/2)

*M.RAMESH, M.Sc.,B,Ed., M.Phil., P.G.Assistant, Co-Operative Urban Municipal Higher Secondary School,Mannargudi,Thiruvarur District*

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

## மின்னூட்டம் பெற்ற சமதளப் பரப்பினால் உருவாகும் மின்புலம்




σ எனும் சீரான மின்னூட்டப் பரப்படர்த்தி கொண்ட முடிவிலா சமதளத தட்டிலிருந்து *r* தொலைவில் *p* என்ற புள்ளி உள்ளது.

அனைத்து திசைகளிலும் மின்புலத்தின் மதிப்பு காஸியன் பரப்பின் ஆர வழியே சமமாக இருக்கும்.

--------(1)

$$\Phi_E = \oint \vec{E}\cdot d\vec{A}$$

PCB For U

$$= \int_{\text{வளை பரப்பு}} \vec{E}\cdot d\vec{A} + \int_{P} \vec{E}\cdot d\vec{A} + \int_{P'} \vec{E}\cdot d\vec{A} = \frac{Q_{\text{உள்}}}{\varepsilon_0}$$ --------(1)

வளைபரப்பின் மேலுள்ள அனைத்து புள்ளிகளிலும் மின்புலமானது பரப்பளவுக் கூறுகளுக்கு செங்குத்தாகவும் $P$ மற்றும் $P'$ பரப்புகளில் அது இணையாகவும் இருக்கிறது [படம்

$$\Phi_E = \int_P E\,dA + \int_{P'} E\,dA = \frac{Q_{\text{உள்}}}{\varepsilon_0}$$ --------(1)

$$Q_{\text{உள்}} = \sigma A$$ --------(1)

$$2E\int_P dA = \frac{\sigma A}{\varepsilon_0}$$

$$2EA = \frac{\sigma A}{\varepsilon_0} \quad \text{அல்லது} \quad E = \frac{\sigma}{2\varepsilon_0}$$ ------- (1)

வெக்டர் வடிவில், $\vec{E} = \frac{\sigma}{2\varepsilon_0}\hat{n}$

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District


Scanned with OKEN Scanner

# மின்னூட்டம் பெற்ற கோளத்தினால் மின்புலம்

| கோளத்திற்கு வெளியே உள்ள புள்ளியில் மின்புலம் *(r>R)* | கோளத்தின் மேற்பரப்பில் உள்ள புள்ளியில் மின்புலம் *(r=R)* | கோளத்தின் உள்ளே உள்ள புள்ளியில் மின்புலம் (r<R) |
|---|---|---|
|   |   |   |
| $\oint_{\text{காஸியன் பரப்பு}} \vec{E}\cdot d\vec{A} = \frac{Q}{\varepsilon_0}$ | $\oint_{\text{காஸியன் பரப்பு}} \vec{E}\cdot d\vec{A} = \frac{Q}{\varepsilon_0}$ | $\oint_{\text{காஸியன் பரப்பு}} \vec{E}\cdot d\vec{A} = \frac{Q}{\varepsilon_0}$ |
| $\vec{E} = \frac{1}{4\pi\varepsilon_0}\frac{Q}{r^2}\hat{r}$ | $\vec{E} = \frac{Q}{4\pi\varepsilon_0 R^2}\hat{r}$ | காஸியன் பரப்புக்குள்ளே $Q = 0$<br>*E=0 (r<R)* |
| Q>0 எனில் மின்புலம் ஆர வழியே வெளிநோக்கி இருக்கும்<br>Q<0எனில் மின்புலம் ஆர வழியே உள்நோக்கி இருக்கும் | | |

Padasalai
PCB For U

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## மின்தேக்கிகளின் தொடர் இணைப்பு




---(1)

$$V = V_1 + V_2 + V_3$$

$Q = CV$ ஆதலால் $V = \frac{Q}{C_1} + \frac{Q}{C_2} + \frac{Q}{C_3}$

$$\frac{Q}{C_S} = Q\left(\frac{1}{C_1} + \frac{1}{C_2} + \frac{1}{C_3}\right)$$

$$\frac{1}{C_S} = \frac{1}{C_1} + \frac{1}{C_2} + \frac{1}{C_3}$$

PCB For U

-------(1)

தொடர் இணைப்பில் உள்ள மின்தேக்கிகளின் தொகுபயன் மின் தேக்குதிறனின் தலைகீழ் மதிப்பானது தனிப்பட்ட மின் தேக்கிகளின் தலைகீழ் மதிப்புகளின் கூடுதலுக்கு சமம் ----(1/2)

## மின்தேக்கிகளின் பக்க இணைப்பு




-----(1)

$$Q = Q_1 + Q_2 + Q_3$$

$Q=CV$ என்பதால்

$$Q = C_1V + C_2V + C_3V$$

$$C_pV = C_1V + C_2V + C_3V$$

$$C_p = C_1 + C_2 + C_3$$

--------(1)

பக்க இணைப்பில் உள்ள மின் தேக்கிகளின் தொகுபயன் மின் தேக்குதிறனின் மதிப்பானது தனிப்பட்ட மின் தேக்கிகளின் கூடுதலுக்கு சமம் -----(1/2)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil., P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## மின்தேக்கியில் சேமிக்கப்படும் ஆற்றலுக்கான கோவையைப் பெறுக

- V மின்னழுத்த வேறுபாட்டில் dQ அளவு மின்னூட்டம் கொண்ட மின்துகள்களை நகர்த்த செய்யப்படும் வேலை

$$dW = V\,dQ$$ ---------(1/2)

மின்தேக்கியை மின்னேற்றம் செய்யத தேவைப்படும் மொத்த வேலை

$$W = \int_0^Q \frac{Q}{C} dQ = \frac{Q^2}{2C}$$ ------(1)

செய்யப்பட்ட வேலை நிலை மின்னழுத்த ஆற்றலாக சேமிக்கப்படுகிறது

$$U_E = \frac{Q^2}{2C} = \frac{1}{2}CV^2 \quad (\because Q = CV)$$ ---------(1)

PCB For U

$$U_E = \frac{1}{2}\left(\frac{\varepsilon_0 A}{d}\right)(Ed)^2 = \frac{1}{2}\varepsilon_0 (Ad) E^2$$ ----------(1)

Padasalai

மின்தேக்கியின் தட்டுகளுக்கு இடையே உள்ள பகுதியின் பருமன் *V=Ad*

**ஓர் அலகு பருமனில் சேமிக்கப்பட்டுள்ள ஆற்றலை,நிலை மின்னழுத்த ஆற்றல் அடர்த்தி என வரையறுக்கலாம்.**

$$u_E = \frac{U_E}{V}$$ ---------(1/2)

$$u_E = \frac{1}{2}\varepsilon_\circ E^2$$ --------(1)

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil., P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

## வான் –டி –கிரா ஃப் மின்னியற்றி




--------- (1)

PCB For U

**தத்துவம்:** நிலை மின்தூண்டல் மற்றும் கூர்முனை செயல்பாடு---(1)

**அமைப்பு :** ----------- (1)

*மின் காப்பு பெற்ற தாங்கியின் மீது ஒரு பெரிய உள்ளீடற்ற மின் கடத்து கோளம் பொருத்தப்பட்டுள்ளது.

*கோளத்தின் நடுவில் **B** என்ற கப்பியும் ,தாங்கியின் அடிப்பகுதிக்கு அருகில் **C** கப்பியும் உள்ளது.

*மின்காத்தாப் பொருள்களான பட்டு அல்லது இரப்பரால் செய்யப்பட்ட பட்டை ஒன்று கப்பிகளின் வழியே செல்கிறது.

*கப்பி **C** மின் மோட்டார் ஒன்றினால் தொடர்ந்து இயக்கப்படுகிறது.

*கப்பிகளுக்கு அருகே கூர்முனைகள் கொண்ட சீப்பு **D** , மின் வழங்கியின் மூலம் $10^4$ V நேர் மின்னழுத்த வேறுபாட்டிலும், சீப்பு **E** ஆனது கோளக கூட்டின் உட்புறமும் இணைக்கப்பட்டுள்ளது.

**செயல்பாடு :** ----------- (2)

*உயர் மின்புலத்தினால் சீப்பு D க்கும் ,பட்டைக்கும் இடையிலான பகுதியிலுள்ள காற்று அயனியாக்கப்படுகிறது

*நேர்மின் துகள் பட்டையை நோக்கியும் எதிர் மின்துகள் சீப்பு D யை நோக்கியும் நகர்கின்றன.

*நேர்மின்துகள் பட்டையில் ஒட்டிக்கொண்டு மேல்நோக்கிச் செல்கின்றன.

*சீப்பு Eயை நெருங்கும்போது நிலை மின்தூண்டலால் அதிகளவிலான எதிர் மற்றும் நேர் மின் துகள்கள் சீப்பின் இரு முனைகளிலும் உருவாகின்றன..

*நேர்மின் துகள்கள் சீப்பு E லிருந்து விரட்டப்பட்டு கோளத்தின் புறப்பகுதியை அடைகின்றன.

*கோளம் கடத்தும் பொருளால் ஆனபடியால் நேர்மின் துகள்கள் கோளத்தின் புறப்பரப்பில் சீராகப் பரவுகின்றன.

*ஒளிவட்ட மின்னிறக்கத்தால் பட்டையிலுள்ள நேர்மின் துகள்கள் காற்றிலுள்ள எதிர் மின்துகள்கள் சமன்செய்கின்றன .

*பட்டை கீழிறங்கும்போது மின்னூட்டமற்ற நிலையில் கீழேயுள்ள சீப்பை நெருங்கியவுடன். மேற்கண்ட நிகழ்வு மீண்டும் தொடர்ந்து நிகழ்வதால் கோளத்தின் புறப்பரப்பில் $10^7$ V மின்னழுத்த வேறுபாடு உருவாகும் வரை இது தொடர்கிறது.

*உயர் அழுத்தத்தில் வாயு நிரப்பப்பட்ட எஃகுக் கலத்தினால் கோளத்தை மூடுவதன் மூலம் மின் துகளின் கசிவினைத் தவிர்க்கலாம்.

**பயன்** :

*அணுக்கரு பிளவையில் பயன்படும் புரோட்டன்கள், டியூட்ரான்கள் போன்ற நேர் அயனிகளை முடுக்குவிக்கப் பயன்படுகிறது. .

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil., P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

## வீட்ஸ்டோன் சமனச் சுற்றில் சமன்செய் நிலைக்கான நிபந்தனையைப் பெறுக.




*மின்சுற்று வலை அமைப்பில் P,Q,R மற்றும் S மின் தடையாக்கிகள் படத்தில் காட்டியவாறு இணைக்கப்பட்டுள்ளன.

*கால்வனா மீட்டர் (G), B மற்றும் D புள்ளிகளுக்கு இடையே இணைக்கப்பட்டுள்ளது.

*B சந்திக்கு கிர்க்காஃப் மின்னோட்ட விதியைப் பயன்படுத்த

-----(1)

PCB For U

*D சந்திக்கு கிர்க்காஃப் மின்னோட்ட விதியைப் பயன்படுத்த,

$$I_2 + I_G - I_4 = 0$$ ------[2] -------- (1/2)

ABDA என்ற மூடிய சுற்றுக்கு கிர்க்காஃப் மின்னழுத்த வேறுபாட்டு விதியை பயன்படுத்த,

$$I_1P + I_GG - I_2R = 0$$ ----------[3] ------- (1/2)

ABCDA என்ற மூடிய சுற்றுக்கு கிர்க்காஃப் மின்னழுத்த வேறுபாட்டு விதியை பயன்படுத்த,

Padasalai

$$I_1P + I_3Q - I_4S - I_2R = 0$$ -------[4] ------------- (1/

கால்வனா மீட்டர் வழியே மின்னோட்டம் பாயாது. ($I_G = 0$). எனவே $I_G = 0$ என [1] மற்றும் [2] ல்

$$I_1 = I_3$$ --------[5] ---------- (1/2)

$$I_2 = I_4$$ --------[6] ---------- (1/2)

[5] மற்றும் [6] ஐ சமன்பாடு [3]ல் பிரதியிட

$$I_1P + I_1Q - I_2S - I_2R = 0$$

$$I_1(P + Q) = I_2(R + S)$$

$$\frac{P+Q}{P} = \frac{R+S}{R}$$

$$\frac{P}{Q} = \frac{R}{S}$$ -----(1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil., P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## மீட்டர் சமனச்சுற்று




*1 மீட்டர் நீளமுள்ள AB சீரான மேங்கனின் கம்பி 1 மீட்டர் அளவுகோலுக்கு இணையாக ஒரு மரப்பலகையில் C மற்றும் D என்ற இரு தாமிரப் பட்டைகளுக்கு இடையே நீட்டப்பட்டுள்ளது

*தாமிரப்பட்டை E ,$G_1$ மற்றும் $G_2$ என்ற இரு இடைவெளிகளில் பொருத்தப்பட்டுள்ளது

----------(1)

*$G_1$ இடைவெளியில் P எனும் தெரியாத மின்தடையும், $G_2$ இடைவெளியில் Q எனும் தெரிந்த மின்தடையாக்கியும் இணைக்கப்பட்டுள்ளன

*கம்பியின் மீதுள்ள தொடுசாவியின் நிலையை அளவுகோல் மூலம் அளவிடலாம்.

*சமனச்சுற்று கம்பியின் முனைகளின் குறுக்கே ஒரு லெக்லாஞ்சி மின்கலமும் சாவியும் இணைக்கப்பட்டுள்ளன. --------- *(1)*

*கம்பியின் மீது தொடுசாவியை நகர்த்தி கால்வனாமீட்டரில் சுழி விலக்கம் பெற்று தோடு சாவியின் நிலை *J* எனும்போது *AJ* மற்றும் *J B* நீளங்கள் முறையே *R* மற்றும் *S* க்கு பதிலாக பெறலாம்

$$\frac{P}{Q} = \frac{R}{S} = \frac{R'.AJ}{R'.JB}$$ --------- *(1)*

Padasalai PCB For U

$$\frac{P}{Q} = \frac{AJ}{JB} = \frac{l_1}{l_2}$$

$$P = Q\frac{l_1}{l_2}$$ --------- *(1)*

**P என்பது தெரியாத மின்தடை எனில்**

$$\rho = P\frac{\pi r^2}{l}$$ --------- *(1)*

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

## வோல்ட் மீட்டரைக் கொண்டு மின்கலத்தின் அகமின்தடை காணல்




*மின்கலத்தின் மின்னியக்கு விசையைக் கண்டறிய உயர் மின்தடை கொண்ட வோல்ட் மீட்டர் இணைக்கப்படுகிறது.

*வோல்ட் மீட்டர் மிகக் குறைந்த அளவே மின்னோட்டத்தை எடுத்துக் கொள்வதால் இச்சுற்று திறந்த சுற்றாக கருதப்படும்.

*வோல்ட் மீட்டர் காட்டும் அளவு, மின்கலத்தின் மின்னியக்கு விசைக்கு சமம்.

--------- (1)

*புற மின் தடையாக்கியை மின்சுற்றில் இணைத்தால், மின்தடையாக்கியின் குறுக்கே மின்னழுத்த வேறுபாடு

$$V = IR$$ ----------(1)

PCB For U

*அக மின்தடை r காரணமாக ,வோல்ட் மீட்டர் காட்டும் அளவு மின்னியக்கு விசையை விட குறைவாக இருக்கும். -------(1)

Padasalai

* Ir என்ற மின்னழுத்த வேறுபாடு r இன் குறுக்கே ஏற்படுவதே இதற்கு காரணம்.

$$V = \xi - Ir$$ ---------- (1)

$$Ir = \xi - V$$

$$\frac{Ir}{IR} = \frac{\xi - V}{V}$$

$$r = \left[\frac{\xi - V}{V}\right] R$$ ------- (1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## மின்கலங்களின் மின்னியக்கு விசைகளை ஒப்பிடுதல்




----------- (1)

**முதன்மை சுற்று:** *:மின்னழுத்தமானி கம்பியானது மின்கலத்தொகுப்பு மற்றும் சாவியுடன் தொடர் இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது

**துணைச் சுற்று** :DPDTசாவி, கால்வனாமீட்டர் , உயர் மின் தடையாக்கி, தொடு சாவி படத்தில் காட்டியது போல் இணைக்கப்பட்டுள்ளன . ----(1)

* முதல் மின்கலம் துணைச் சுற்றில் இணைப்பில் உள்ளபோது , தொடு சாவியை நகர்த்தி கால்வனா மீட்டரில் சுழி விலக்கம் பெறப்பட்டு சமன்செய் நீளம் $l_1$ அளவிடப்படுகிறது .

PCB For U

$$\xi_1 = Irl_1$$ -----------(1)

*இரண்டாவது மின்கலம் துணைச் சுற்றில் இணைப்பில் உள்ளபோது , தொடு சாவியை நகர்த்தி கால்வனா மீட்டரில் சுழி விலக்கம் பெறப்பட்டு சமன்செய் நீளம் $l_2$ அளவிடப்படுகிறது .

$$\xi_2 = Irl_2$$ -----------(1)

$$\frac{\xi_1}{\xi_2} = \frac{l_1}{l_2}$$ ----------(1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

## மின்னழுத்தமானியைப் பயன்படுத்தி மின்கலத்தின் அக மின்தடை காணல்




**முதன்மைச் சுற்று** : மின்கலத்தின் நேர் மின்முனை மின்னழுத்தமானி கம்பியின் C முனையுடனும், எதிர் மின் முனை சாவி $K_1$ வழியாக D முனையுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

**துணைச் சுற்று** : அக மின்தடை காணவேண்டிய மின்கலத்தின் நேர் மின்முனை மின்னழுத்தமானிக் கம்பியின் C முனையுடன் இணைக்கப்படுகிறது. மின் களத்தின் எதிர் மின்முனையானது கால்வனா மீட்டர், உயர் மின் தடையாக்கி வழியாக தொடு சாவியுடன் இணைக்கப்படுகிறது

*$K_2$ திறந்த நிலையில் சமன்செய் நீளம் அளவிடப்படுகிறது. ------------ (1)

$$\xi \propto l_1$$ ----------(1)

*மின்தடைப்பெட்டியில் தகுந்த மின்தடையாக்கி தேர்ந்தெடுக்கப்பட்டு $K_2$ சாவி மூடப்படுகிறது. மின்கலம் வழியே பாயும் மின்னோட்டம்

Padasalai

$$I = \frac{\xi}{R+r}$$ ---------(1)

PCB For U

$$V = \frac{\xi R}{R+r}$$ ---------- (1)

$$\frac{\xi R}{R+r} \propto l_2$$

$$\frac{R+r}{R} = \frac{l_1}{l_2} \Rightarrow 1 + \frac{r}{R} = \frac{l_1}{l_2}$$

$$r = R\left[\frac{l_1}{l_2} - 1\right]$$

$$\therefore\ r = R\left(\frac{l_1 - l_2}{l_2}\right)$$ -----------(1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## மின்னோட்டம் பாயும் ஈறிலா நீளம் உடைய கடத்தியிலிருந்து குறிப்பிட்ட தொலைவில் உள்ள புள்ளியில் காந்தப்புலம்




-----(1)

$$d\vec{B} = \frac{\mu_0}{4\pi}\frac{Idl\sin\theta}{r^2}\hat{n} \quad \text{-----(1)}$$

$\Delta ABC$ல், $\sin\theta = \frac{AC}{AB} \Rightarrow AC = AB\sin\theta$

$\angle APB = \angle APC = d\phi$

$\Delta APC$ல், $\sin(d\phi) = \frac{AC}{AP}$ ---(1/2)

$d\phi$ மிக சிறியது எனவே, $\sin(d\phi) \simeq d\phi$

$AP = r \Rightarrow AC = rd\phi$

$$\therefore AC = dl\sin\theta = rd\phi \quad \text{---(1/2)}$$

$$\therefore d\vec{B} = \frac{\mu_0}{4\pi}\frac{I}{r^2}(rd\phi)\hat{n} = \frac{\mu_0}{4\pi}\frac{Id\phi}{r}\hat{n}$$

$\Delta OPA$ல், $\cos\phi = \frac{OP}{AP} = \frac{a}{r}$

$$\Rightarrow r = \frac{a}{\cos\phi} \quad \text{---(1/2)}$$

$$d\vec{B} = \frac{\mu_0}{4\pi}\frac{I}{a/\cos\phi}d\phi\,\hat{n}$$

$$\Rightarrow d\vec{B} = \frac{\mu_0 I}{4\pi a}\cos\phi\, d\phi\,\hat{n}$$

கடத்தி $YY'$–ஆல் புள்ளி Pல் ஏற்படும் காந்தப்புலம்

$$\vec{B} = \int_{-\phi_1}^{\phi_2} d\vec{B} = \int_{-\phi_1}^{\phi_2}\frac{\mu_0 I}{4\pi a}\cos\phi\, d\phi\,\hat{n}$$

$$= \frac{\mu_0 I}{4\pi a}\left[\sin\phi\right]_{-\phi_1}^{\phi_2}\hat{n}$$

$$= \vec{B} = \frac{\mu_0 I}{4\pi a}(\sin\phi_1 + \sin\phi_2)\hat{n}$$

---(1/2)

ஈறிலா நீளம் கொண்ட கடத்திக்கு

$$\phi_1 = \phi_2 = 90^\circ$$

$$\vec{B} = \frac{\mu_0 I}{4\pi a}\times 2\hat{n} \Rightarrow \vec{B} = \frac{\mu_0 I}{2\pi a}\hat{n} \quad \text{-----(1)}$$

PCB For U
Padasalai

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## மின்னோட்டம் பாயும் வட்ட வடிவக்கம்பிச் சுருளின் அச்சு வழியே ஏற்படும் காந்தப்புலத்துக்கான கோவையைப் பெறுக




--------(1)

பயட் – சாவர்ட் விதியின்படி மின்னோட்டக் கூறினால் புள்ளி $P$ல் காந்தப்பபுலம்

$$dB = \frac{\mu_\circ}{4\pi}\frac{I\,dl\sin\theta}{r^2} = \frac{\mu_\circ}{4\pi}\frac{I\,dl}{r^2}$$ ---(1)

ஒவ்வொரு மின்னோட்டக் கூறினாலும் ஏற்படும் காந்தப்புலத்தை இரு கூறுளாகப் பிரிக்கும்போது கிடைத்தளக் கூறுகள் ஒன்றையொன்று சமன் செய்து கொள்ளும்.

$$\vec{B} = \int d\vec{B} = \int dB\sin\phi\,\hat{k}$$

$$= \frac{\mu_0 I}{4\pi}\int \frac{dl}{r^2}\sin\phi\,\hat{k}$$

$\Delta OCP$லிருந்து

PCB For U

$$\sin\phi = \frac{R}{\left(R^2+z^2\right)^{1/2}} \text{ மற்றும் } r^2 = R^2 + z^2.$$

$$\vec{B} = \frac{\mu_0 NI}{2}\frac{R^2}{\left(R^2+z^2\right)^{3/2}}\hat{k}$$ -------(1)

$$\vec{B} = \frac{\mu_0 I}{4\pi}\frac{R}{\left(R^2+z^2\right)^{3/2}}\hat{k}\left(\int dl\right)$$

$$\vec{B} = \frac{\mu_0 I}{2}\frac{R^2}{\left(R^2+z^2\right)^{3/2}}\hat{k}$$ ---(1)

வட்டச் சுருள் N சுற்றுகளைக் கொண்டது எனில்,

$$\vec{B} = \frac{\mu_0 NI}{2}\frac{R^2}{\left(R^2+z^2\right)^{3/2}}\hat{k}$$

சுருளின் மையத்தில் காந்தப்புலம்

$$\vec{B} = \frac{\mu_0 NI}{2R}\hat{k} \quad \text{ஏனெனில் } z = 0$$ ------(1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# வரிச்சுருளினால் ஏற்படும் காந்தப் புலத்தை விவரி




-----------(1)

PCB For U

$$\oint_C \vec{B}\cdot\vec{dl} = \mu_0 I_{\text{மூடப்பட்ட}}$$

$= \mu_0 \times$ (ஆம்பியரின் சுற்றால் மூடப்பட்ட மொத்த மின்னோட்டம்) ------------ (1)

$$\oint_C \vec{B}\cdot d\vec{l} = \int_a^b \vec{B}.d\vec{l} + \int_b^c \vec{B}.d\vec{l} + \int_c^d \vec{B}.d\vec{l} + \int_d^a \vec{B}.d\vec{l}$$

--------(1/2)

bc மற்றும் dc பக்கங்களின் நீளக்கூறுகள் வரிச்சுருளின் அச்சின் வழியே அமைந்துள்ளது மட்டுமல்லாமல் காந்தப்புலத்திற்கு செங்குத்தாகவும் அமைந்துள்ளன.

எனவே,

$$\int_b^c \vec{B}.d\vec{l} = \int_b^c |\vec{B}|\,|d\vec{l}|\cos 90^\circ = 0$$

$$\int_d^a \vec{B}.d\vec{l} = 0$$

-----(1/2)

மேலும் வரிச்சுருளுக்கு வெளியேயும் காந்தப்புலம் சுழி. எனவே தொகையீடு $\int \vec{B}.\vec{dl} = 0$

ab வழியாக உள்ள பாதையின் தொகையீடு

$$\int_a^b \vec{B}.d\vec{l} = B\int_a^b dl\cos 0^\circ = B\int_a^b dl$$

N சுற்றுகளுக்கு வரிச்சுருளின் வழியே பாயும் மின்னோட்டம் $NI$ என்க, எனவே

$$\int_a^b \vec{B}.d\vec{l} = BL = \mu_0 NI \Rightarrow B = \mu_0 \frac{NI}{L}$$

$$\frac{N}{L} = n$$

-------(1/2)

$$B = \mu_0 \frac{nLI}{L} = \mu_0 nI$$

------ (1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

## சைக்ளோட்ரானின் அமைப்பு மற்றும் செயல்படும் விதத்தை விவரி




**தத்துவம்** : மின்துகள் காந்தப்புலத்திற்கு செங்குத்தாக செல்லும்போது லாரன்ஸ் விசையை உணரும்.---(1)

**அமைப்பு** : ---(1)

*இரண்டு அரை வட்ட , D வடிவ உலோகக் கொள்கலன்கள் சிறிய இடைவெளியில் பிரிக்கப்பட்டு இடைவெளி நடுவே முடுக்குவிக்க வேண்டிய மின்துகள்களை உமிழும் மூலம் உள்ளது.

*D க்களின் தளத்திற்கு செங்குத்தாக காந்தப்புலத்தின் திசை அமையுமாறு மின்காந்தங்களினால் கட்டுப்படுத்தப்பட்ட சீரான காந்தப்புலம் செயல்படுகிறது..

*இரு D க்களும் உயர் அதிர்வெண் கொண்ட மாறுதிசை மின்னழுத்த வேறுபாட்டு மூலம் ஒன்றுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**வேலை செய்யும் விதம்:** *அயனி மூலம் நேர் அயனியை உமிழும் அதே நேரத்தில் எதிர் மின்னழுத்தம் கொண்ட $D_1$ னால் முடுக்கப்படுகிறது. **-----(1)**

*D க்களின் தளத்திற்கு செங்குத்தாக காந்தப்புலம் செயல்படுவதால் அயனி வட்டப்பாதையை மேற்கொள்ளும்.

*அரை வட்டப் பாதையை நிறைவு செய்யும் அதே நேரத்தில் Dக்களின் துருவம் மாற்றப்படும்..

*அயனி $D_2$ ஐ நோக்கி அதிக திசைவேகத்துடன் முடுக்கப்படும்..இதனால் அயனி ஒரு வட்டப் பாதையை மேற்கொள்கிறது.

* மின்துகள் வட்டப்பாதையை மேற்கொள்ள தேவையான மைய நோக்கு விசையை லாரன்ஸ் விசை கொடுக்கிறது.

$$\frac{mv^2}{r} = qvB$$

$$\Rightarrow r = \frac{m}{qB}v$$

$$\Rightarrow r \propto v$$ --------(1/2)

PCB For U

$$f_{\text{அலையியற்றி}} = \frac{qB}{2\pi m}$$ ---------(1/2)

$$T = \frac{2\pi m}{qB}$$ -------- (1/2)

$$KE = \frac{1}{2}mv^2 = \frac{q^2B^2r^2}{2m}$$ --------(1/2)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

**காந்தப்புலத்தைச் சார்ந்த கம்பிச் சுருளின் திசையமைப்பை மாற்றுவதன் மூலம் மின்னியக்கு விசையைப் பெறும் முறையை விவரி.**




----(1)

t வினாடி நேரத்தில் கம்பிச் சுருள் இடஞ்சுழியாக குறிப்பிட்ட கோணத்தில் சுழற்றப்படுகிறது. கம்பிச் சுருளோடு தொடர்புகொண்ட காந்தப்பாயத்தின் செங்குத்துக் கூறு மட்டுமே மின்காந்ததூண்டலில் பங்கேற்கிறது.

$$N\Phi_B = N\Phi_m \cos\omega t$$ ----- (1)

PCB For U

$$\varepsilon = -\frac{d}{dt}(N\Phi_B) = -\frac{d}{dt}(N\Phi_m \cos\omega t)$$

$$= -N\Phi_m(-\sin\omega t)\omega$$

$$= N\Phi_m \omega \sin\omega t$$ -------(1)

*ωt =90$^0$ ல் தூண்டப்பட்ட மின்னியக்கு விசையின் பெரும மதிப்பு,

$$\varepsilon_m = N\Phi_m\omega$$

$$\varepsilon_m = NBA\omega$$ -----(1)

*குறிப்பிட்ட கணத்தில் தூண்டப்பட்ட மின்னியக்கு விசை,

$$\varepsilon = \varepsilon_m \sin\omega t$$ ----(1)

*மாறுதிசை மின்னியக்கு விசை ஒரு மூடிய சுற்றுக்கு அளிக்கப்பட்டால் சைன் வளைகோடு வடிவில் பெறப்படும் மாறுதிசை மின்னோட்டம் $i = I_m \sin\omega t$

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

## தொடர் RLC சுற்றில் செலுத்தப்பட்ட மின்னழுத்த வேறுபாடு மற்றும் மின்னோட்டம் இடையே உள்ள கட்ட கோணத்திற்கான சமன்பாட்டைத் தருவி.

*ஒரு மாறுதிசை மின்னோட்ட மூலத்திற்கு குறுக்காக *R*,*L* மற்றும் *C* ஆகியவை தொடர் இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

*செலுத்தப்பட்ட மாறுதிசை மின்னழுத்த வேறுபாட்டின் சமன்பாடு ,

$$\upsilon = V_m \sin \omega t$$ -------(1/2)

PCB For U







----(1/2)

------(1/2)

$$V_m^2 = V_R^2 + (V_L - V_C)^2$$

$$V_m = \sqrt{(I_m R)^2 + (I_m X_L - I_m X_C)^2}$$ ----(1/2)

$$I_m = \frac{V_m}{\sqrt{R^2 + (X_L - X_C)^2}}$$ ----- (1/2)

$$I_m = \frac{V_m}{Z}$$

இங்கு $Z = \sqrt{R^2 + (X_L - X_C)^2}$ -----(1/2)

$$\tan\phi = \frac{V_L - V_C}{V_R} = \frac{X_L - X_C}{R}$$ ------(1)

**சிறப்பு நேர்வுகள்**

(i) $X_L > X_C$ எனில், $(X_L - X_C)$ நேர்க்குறியாகும் மற்றும் $\phi$ என்ற கட்ட கோணமும் நேர்க்குறியாகும். இதன்

$$\therefore v = V_m \sin \omega t;\ i = I_m \sin(\omega t - \phi)$$ -----(1/2)

(ii) $X_L < X_C$ எனில், $(X_L - X_C)$ எதிர்க்குறியாகும் மற்றும் $\phi$ என்ற கட்ட கோணமும் எதிர்க்குறியாகும். இதன்

$$\therefore v = V_m \sin \omega t;\ i = I_m \sin(\omega t + \phi)$$ ------(1/2)

(iii) $X_L = X_C$ எனில், $\phi$ ஆனது சுழி ஆகும். எனவே, மின்னோட்டம் மற்றும் மின்னழுத்த வேறுபாடு

$$\therefore v = V_m \sin \omega t;\ i = I_m \sin \omega t$$ -----(1/2)

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

## மின்மாற்றியின் அமைப்பு மற்றும் செயல்படும் விதத்தை விவரி

**தத்துவம்** :பரிமாற்று மின்தூண்டல் ---- (1/2)

**அமைப்பு** : ------(1/2)

*சிலிக்கான் எஃகினால் செய்யப்பட்ட மெல்லிய தகடுகள் மீது இரு கம்பிச் சுருள்கள் மின்னியலாக காப்பிடப்பட்டு உள்ளகம் மூ லம் காந்தவியலாக இணைக்கப்பட்டுள்ளன.




**முதன்மைச் சுருள்** : மாறுதிசை மின்னழுத்த வேறுபாடு அளிக்கப்படும் கம்பிச் சுருள்

**துணைச் சுருள்**: வெளியீடு திறன் எடுக்கப்படும் கம்பிச் சுருள்.

**செயல்பாடு:** ------ (1/2)

*முதன்மைச் சுருலானது மாறுதிசை மின்னழுத்த மூலத்துடன் இணைக்கப்பட்டால்

முதன்மைச் சுருளோடு தொடர்புடைய காந்தப்பாயம் முழுவதும் துணைச் சுருளோடு தொடர்ப்பிலிருக்கும்.

*பாய மாற்றத்தின் விளைவாக முதன்மைச் சுருள் மற்றும் துணைச் சுருளில் மின்னியக்கு விசை,

Padasalai PCB For U

$$\upsilon_p = \varepsilon_p = -N_p \frac{d\Phi_B}{dt}$$ ------(1/2)

$$\upsilon_s = \varepsilon_s = -N_s \frac{d\Phi_B}{dt}$$ ------(1/2)

$$\frac{V_s}{V_p} = \frac{N_s}{N_p} = \frac{I_p}{I_s} = K$$ --------(1/2)

i) $N_s > N_p$ அல்லது $K > 1, \therefore V_s > V_p$ மற்றும் $I_s < I_p$. இந்த நேர்வு ஏற்று மின்மாற்றி ஆகும். இதில் மின்னழுத்த வேறுபாடு அதிகரிக்கிறது மற்றும் தொடர்புடைய மின்னோட்டம் குறைகிறது.

ii) $N_s < N_p$ அல்லது $K < 1, \therefore V_s < V_p$ மற்றும் $I_s > I_p$ . இது இறக்கு மின்மாற்றி ஆகும். இதில் மின்னழுத்த வேறுபாடு குறைகிறது மற்றும் தொடர்புடைய மின்னோட்டம் அதிகரிக்கிறது.

----- (1)

$$\eta = \frac{\text{வெளியீடு திறன்}}{\text{உள்ளீடு திறன்}} \times 100\%$$

------ (1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

வெளிவிடு நிறமாலை என்றால் என்ன? இதன் வகைகளை விளக்குக.

*சுயமாக ஒளிவிடும் மூலத்தின் நிறமாலை வெளிவிடு நிறமாலை எனப்படும் .----(1)

**தொடர் வெளிவிடு நிறமாலை --------(1)**

*மின்னிழை விளக்கிலிருந்து வரும் ஒளியை முப்பட்டகத்தின் வழியே செலுத்தும்போது நிறப்பிரிகை அடைந்து ஊதா முதல் சிவப்பு வரை அனைத்து வண்ணங்களின் அலை நீளங்களையும் பெற்றுள்ளது.

*(எ-டு)கார்பன் வில் விளக்கின் நிறமாலை,திட மற்றும் திரவங்களின் நிறமாலை

**வரி வெளிவிடு நிறமாலை ---------(1 1/2)**

*சூடான வாயுவிலிருந்து வெளிவரும் ஒளியை முப்பட்டகத்தின் மீது செலுத்தி பெறப்படும் நிறமாலை .

*வரையறுக்கப்பட்ட அலைநீளங்கள் அல்லது அதிர்வெண்கள் கொண்ட கூர்மையான வரிகள்.

*தனிமங்களின் கிளர்வுற்ற அணுக்களால் ஏற்படுகிறது.இது தனிமங்களின் சிறப்பியல்பை வெளிப்படுத்தும்.

*ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் அணுக்களின் நிறமாலை.

PCB For U

**பட்டை வெளிவிடு நிறமாலை ------- (1 ½)**

Padasalai

*ஒன்றுடன் ஒன்று மேற்போருந்தும் அதிக எண்ணிக்கையிலான நெருக்கமான வரிகளை உள்ளடக்கிய பட்டைகளைக் கொண்டுள்ளது.

*ஒரு முனையில் கூர்மையாகத் தொடங்கி மறுமுனையில் மங்கலாக முடிவடைகிறது.

*(எ-டு) மின்னிறக்க குழாயில் உள்ள அமோனியா வாயு

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

**உட்கவர் நிறமாலை என்றால் என்ன? இதன் வகைகளை விவரி.**

ஒரு உட்கவர் பொருளின் வழியாக ஒளி செலுத்தப்பட்டு பெறப்படும் நிறமாலை உட்கவர் நிறமாலை எனப்படும். ------ *(1)*

**தொடர் உட்கவர் நிறமாலை ------ *(1)***

*ஒரு ஊடகத்தின் வழியே ஒளியை செலுத்தி வெளிவரும் ஒளியை முப்பட்டகத்தின் வழியே செலுத்தி பெறப்படும் நிறமாலை.

*ஒரு நீல நிறக்கண்ணாடி வழியே வெள்ளொளியை செலுத்தும்போது நீல நிறத்தைத் தவிர மற்ற வண்ணங்கள் அனைத்தையும் உட்கவர்ந்து விடும்.

**வரி உட்கவர் நிறமாலை ------ *1 1/2***

PCB For U

*ஒளிரும் மின்னிழை விளக்கிலிருந்து வரும் ஒளியை குளிர் நிலையிலுள்ள வாயுவின் வழியே செலுத்திய பின் முப்பட்டகத்தின் வழியே செலுத்தி பெறப்படும் நிறமாலை.

*கார்பன் வில் விளக்கிலிருந்து வரும் ஒளியை சோடியம் ஆவி வழியே செலுத்திய பின் மஞ்சள் வண்ணப் பகுதியில் இரு கருங்கோடுகள் பெறப்படும்.

Padasalai

**பட்டை உட்கவர் நிறமாலை ------- *1 1/2***

*வெள்ளை நிற ஒளியை வாயுத் துகள்கள் வழியே செலுத்தி பெறப்படும் நிறமாலை
*பிரகாசமான வெண்மை நிறப் பிண்ணனியில் கரும்பட்டைகள் காணப்படும்.

*அயோடின் வாயுத் துகள்கள் ,நீர்த்த நிலையிலுள்ள இரத்தம் ,தாவரத்தின் பச்சையம்.

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**

Scanned with OKEN Scanner

## மேக்ஸ்வெல் நுண்கணித வடிவ சமன்பாடுகளை எழுதுக.

*நிகர மின்பாயத்தை , மூடப்பட்ட பரப்பிலுள்ள நிகர மின்னூட்டத்தோடு தொடர்புபடுத்துகிறது.

$$\oint \vec{E} \cdot d\vec{A} = \frac{Q_{\text{மூடப்பட்ட}}}{\varepsilon_{\circ}}$$ (காஸ்விதி)

PCB For U

----------(1)

*ஒரு மூடப்பட்ட பரப்பிலுள்ள காந்தப்புலத்தின் பரப்பு தொகையீட்டு மதிப்பு சுழியாகும்.

$$\oint \vec{B} \cdot d\vec{A} = 0$$

(காந்தவியலின் காஸ் விதி) ---------- (1)

*மாறுபடும் காந்தப் பாயத்துடன் மின்புலத்தைத் தொடர்புபடுத்துகிறது.

$$\oint_{l} \vec{E} \cdot d\vec{l} = -\frac{d}{dt}\Phi_{B}$$ (பாரடேயின் விதி)

--------(1)

Padasalai

*ஒரு மூடப்பட்ட பாதையைச் சுற்றியுள்ள காந்தப்புலத்தையும், அம்மூடப்பட்ட பாதையில் பாயும் கடத்து மின்னோட்டம் மற்றும் இடப்ப்யர்ச்சி மின்னோட்டத்தையும் தொடர்புப் படுத்துகிறது.

$$\oint \vec{B}.\vec{dl} = \mu_0 I_{\text{மூடப்பட்ட}} + \mu_0 \varepsilon_0 \frac{d}{dt}\int_{s} \vec{E}.\overrightarrow{dA}$$

**ஆம்பியர் – மேக்ஸ்வெல் விதி** ---------- (2)

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

**ஆடி சமன்பாட்டைத் தருவி.**




$\angle BPA = \angle B'PA'$

$\Delta BPA$ மற்றும் $\Delta B'PA'$

இரண்டும் ஒத்த முக்கோணங்களாகும்

$$\frac{A'B'}{AB}=\frac{PA'}{PA} \quad ---(1/2)$$

-----(1)

PCB For U

மற்ற ஒத்த முக்கோண இணை $\Delta DPF$ மற்றும் $\Delta B'A'F$ ஆகும். (இங்கு $PD$ கிட்டத்தட்ட நேரான செங்குத்துக் கோடாகும்).

$$\frac{A'B'}{PD}=\frac{A'F}{PF}$$

$PD = AB.$

$$\frac{A'B'}{AB}=\frac{A'F}{PF} \quad ---(1/2)$$

$$\frac{PA'}{PA}=\frac{A'F}{PF}=\frac{PA'-PF}{PF} \quad -----(1)$$

Padasalai

தூரங்களுக்கு கார்ட்டீசியன் குறியீட்டு மரபை பின்பற்றும்போது,

$PA=-u,\qquad PA'=-v,\qquad PF=-f$

$$\frac{-v}{-u}=\frac{-v-(-f)}{-f}=\frac{v-f}{f}; \quad -----(1)$$

$$\frac{v}{u}=\frac{v}{f}-1$$

இருபுறமும் $v$ ஆல் வகுக்க

$$\frac{1}{u}=\frac{1}{f}-\frac{1}{v}$$

$$\frac{1}{v}+\frac{1}{u}=\frac{1}{f} \quad -----(1)$$

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

## ஒளியின் வேகம் கண்டறிவதற்கான ஃபிஸ்யு முறை






*ஒளி பற்சக்கரத்திலிருந்து ஆடிக்கு சென்று மீண்டும் பற்சக்கரத்தை அடையும் தொலைவு 2d, எடுத்துக்கொண்ட காலம் t எனில் ---------(1)

$$v = \frac{2d}{t}$$ ---(1/2)

*ஒளி முதன் முதலில் மறையும் நேரத்தில் பற்சக்கரத்தின் கோணவேகம்

$$\omega = \frac{\theta}{t}$$ ------(1/2)

$$\theta = \frac{\text{வட்டத்தின் மொத்தக் கோணம் ரேடியனில்}}{\text{பற்களின் எண்ணிக்கை + வெட்டுகளின் எண்ணிக்கை}}$$

$$\theta = \frac{2\pi}{2N} = \frac{\pi}{N}$$ -------(1/2)

$$\omega = \frac{\pi / N}{t} = \frac{\pi}{Nt}$$ ----------(1/2)

$$t = \frac{\pi}{N\omega}$$ -----------(1/2)

$$v = \frac{2d}{\pi / N\omega}$$

$$v = \frac{2dN\omega}{\pi}$$ ----------(1)

*காற்றில் ஒளியின் வேகம் v = $2.99792 \times 10^{8}$ m $s^{-1}$ --------(1/2)

Padasalai



Scanned with OKEN Scanner

## லென்ஸ் உருவாக்குபவரின் சமன்பாடு மற்றும் லென்ஸ் சமன்பாடு




-----(1)

கோளகப்பரப்பினால் ஏற்படும் ஒளி விலகலுக்கான சமன்பாடு

$$\frac{n_2}{v}-\frac{n_1}{u}=\frac{(n_2-n_1)}{R} \quad ---(1/2)$$

ஒளிவிலகு பரப்பு 1ல் ஒளிக்கதிர் $n_1$ லிருந்து $n_2$ க்கு செல்கிறது.

$$\frac{n_2}{v'}-\frac{n_1}{u}=\frac{(n_2-n_1)}{R_1} \quad ---(1/2)$$

ஒளிவிலகு பரப்பு 2ல் ஒளிக்கதிர் $n_1$ லிருந்து $n_2$ க்கு செல்கிறது.

$$\frac{n_1}{v}-\frac{n_2}{v'}=\frac{(n_1-n_2)}{R_2} \rightarrow (2) \quad ---(1/2)$$

$(1)+(2) \Rightarrow$

$$\frac{n_1}{v}-\frac{n_1}{u}=(n_2-n_1)\left(\frac{1}{R_1}-\frac{1}{R_2}\right)$$

$$\frac{1}{v}-\frac{1}{u}=\left(\frac{n_2-n_1}{n_1}\right)\left(\frac{1}{R_1}-\frac{1}{R_2}\right)$$

$$\frac{1}{v}-\frac{1}{u}=\left(\frac{n_2}{n_1}-1\right)\left(\frac{1}{R_1}-\frac{1}{R_2}\right) \quad ---(1/2)$$

பொருள் ஈறிலா தொலைவில் இருந்தால்,

$u=\infty,\ v=f$

$$\frac{1}{f}-\frac{1}{\infty}=\left(\frac{n_2}{n_1}-1\right)\left(\frac{1}{R_1}-\frac{1}{R_2}\right)$$

$$\frac{1}{f}=\left(\frac{n_2}{n_1}-1\right)\left(\frac{1}{R_1}-\frac{1}{R_2}\right)$$

$n_2=n;\ n_1=1$

$$\frac{1}{f}=(n-1)\left(\frac{1}{R_1}-\frac{1}{R_2}\right) \quad -----(1)$$

மேற்கண்ட சமன்பாடு,லேன்ஸ் உருவாக்குபவரின் சமன்பாடு ஆகும்.

$$\frac{1}{v}-\frac{1}{u}=\frac{1}{f} \quad -----(1)$$

இச்சமன்பாடு லென்ஸ் சமன்பாடு எனப்படும்.

PCB For U
Padasalai

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

## ஒளிமின் சமன்பாட்டைப் பற்றிய ஐன்ஸ்டீனின் விளக்கத்தை விவரி

**ஒரு உலோகப்பரப்பின் மீது விழும் ஃபோட்டானின் ஒரு பகுதி ஆற்றல் உலோகப்பரப்பின் மின்னழுத்த அரணைக் கடப்பதற்கும் ,மீதமுள்ள ஆற்றல் உமிழப்பட்ட எலெக்ட்ரானின் இயக்க ஆற்றலாகவும் மாறுகிறது.**
**ஆற்றல் அழிவின்மை விதிப்படி,**

$$h\nu = \phi_0 + \frac{1}{2}mv^2 \quad \text{-----(1)}$$

PCB For U




*படும் ஒளியின் அதிர்வெண்ணைக் குறைத்தால் ஒளி எலெக்ட்ரான்களின் வேகம் அல்லது இயக்க ஆற்றல் குறைகிறது.
*ஒளியின் குறிப்பிட்ட அதிர்வெண்ணில் எலெக்ட்ரான்கள் இயக்க ஆற்றல் ஏதுமின்றி உமிழப்படுகிறது.




-----(1/2)

$$h\nu_0 = \phi_0 \quad \text{---(1/2)}$$

$$h\nu = h\nu_0 + \frac{1}{2}mv^2 \quad \text{------- (1)}$$




*அக மோதல்களினால் எலெக்ட்ரான்களுக்கு ஆற்றல் இழப்பு ஏற்படவில்லை எனில்,அவை பெரும இயக்க ஆற்றலுடன் உமிழப்படுகின்றன.




$$K_{பெருமம்} = \frac{1}{2}mv^2_{பெருமம்} \quad \text{-----(1/2)}$$

----(1/2)

$$K_{பெருமம்} = h\nu - \phi_0$$




*வரைபடம் ஒரு நேர்கோடாகும்.
*நேர்கோட்டின் சாய்வு *h* மற்றும் *y* அச்சு வெட்டுப்பகுதி −φ ஆகும்

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**


Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## ஒளி (உமிழ்வு)மின்கலம் அமைப்பு மற்றும் செயல்படும் விதத்தை விவரி




---(1)

**தத்துவம்**

ஒளி மின்விளைவு ----(1)

**அமைப்பு** ------- *(1)*

*வெற்றிடமாக்கப்பட்ட கண்ணாடி அல்லது குவார்ட்ஸ் குமிழில் இரண்டு உலோக மின்வாய்கள் உள்ளன.

*கேத்தோடானது ஒளி உணர்பொருள் பூசப்பட்டு அரை உருளை வடிவத்தில் இருக்கும்.

*கேத்தோடின் அச்சில் மெல்லிய கம்பியாலான ஆனோடு உள்ளது.

*கேத்தோடு மற்றும் ஆனோடு இடையே மின்னழுத்த வேறுபாடு கால்வனா மீட்டர் வழியே அளிக்கப்படுகிறது

Padasalai

**வேலை செய்யும் விதம்** :----- (1)

PCB For U

*கேத்தொடின் மீது தகுந்த ஒளி படும்போது அதிலிருந்து எலெக்ட்ரான்கள் உமிழப்படுகின்றன.

*எலெக்ட்ரான்கள் ஆனோடினால் கவரப்படுவதால் மின்னோட்டம் உருவாகிறது.

இதனை கால்வனாமீட்டார் மூலம் அளவிடலாம்

**கேத்தோடிற்கு, மின்னோட்டத்தின் மதிப்பு**

i) **படுகதிர்வீச்சின் செறிவு மற்றும்**

ii) **ஆனோடு மற்றும் கேத்தோடு இடைப்பட்ட மின்னழுத்த வேறுபாடு ஆகியவற்றைப் பொருத்து அமையும்.**

-------(1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## டேவிசன்- ஜெர்மர் சோதனை




----(1)

PCB For U

*குறைந்த மின்னழுத்த மின்கல அடுக்கு மூலம் மின்னிழை சூடுபடுத்தப்படுவதால் வெப்ப அயனி உமிழ்வு மூலம் எலெக்ட்ரான்கள் உமிழப்படுகின்றன

*உயர் மின்னழுத்த மின்கல அடுக்கு மூலம் மின்னிழை மற்றும் அலுமினிய உருளை ஆனோடு இடையே கொடுக்கப்படும் மின்னழுத்த வேறுபாட்டினால் எலெக்ட்ரான்கள் முடுக்கப்படுகின்றன.

PCB For U

*இரு மெல்லிய அலுமினிய தகடுகளால் எலெக்ட்ரான்கள்

*சிதறடிக்கப்படும் எலெக்ட்ரான் கற்றையின் செறிவு எலெக்ட்ரான் பகுப்பானால் அளவிடப்படுகிறது

*சிதறடிக்கப்பட்ட எலெக்ட்ரான் கற்றையின் செறிவு கோணம் θ ன் சார்பாக அளவிடப்படுகிறது.




------(1)

பல்வேறு அணு தளங்களில் விளிம்பு விளைவு அடைந்து வரும் எலெக்ட்ரான் அலைகளின் செறிவு ஆக்க குறுக்கிட்டு விளைவினால் $50^0$ கோணத்தில் பெருமமாக அமையும்

$$\lambda = \frac{12.27}{\sqrt{V}}\,Å = \frac{12.27}{\sqrt{54}}$$

$$\lambda = 1.67\ Å$$

கண்டறியப்பட்ட 1.65 Å என்ற மதிப்புடன் மிகவும் பொருந்தியுள்ளது. எனவே இச்சோதனை ஆனது டி ப்ராயின் இயங்கும் துகளிற்கான அலை இயல்பு எடுகோளை நேரடியாகச் சரிபார்த்துள்ளது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

**நிறை எண்ணைப் பொறுத்து சராசரி பிணைப்பாற்றலின் மாறுபாட்டை வரைபடத்துடன் அதன் இயல்புகளை விளக்குக**

ஒரு நியூக்ளியானுக்கான சராசரி பிணைப்பா ற்றல்

$$\overline{BE} = \frac{[Zm_H + Nm_n - M_A]c^2}{A}$$ -------(1)

**ஒரு நியூக்ளியானுக்கான சராசரி பிணைப்பாற்றல் என்பது அணுக்கரு ஒன்றிலிருந்து ஒரு நியூக்ளியானை வெளியேற்றத் தேவைப்படும் சராசரி ஆற்றலாகும்.-----(1)**




PCB For U

-------(1)

*A = 56 (இரும்பு) 8.8 MeV பெரும மதிப்பு

*A =40 முதல் 120 வரை சராசரி பிணைப்பு ஆற்றல் 8.5 MeV(அதிக நிலைத் தன்மை , கதிரியக்கத்தன்மை இல்லை)

*A < 28 இரு இலேசான தனிமங்களை இணைவு செய்து அணுக்கருவை உருவாக்கும்போது ஏராளமான ஆற்றல் வெளிப்படும் (அணுக்கரு இணைவு –ஹைட்ரஜன் குண்டு)

*கனமான தனிமத்தின் அணுக்கருவை பிளவு செய்து இரு இலேசான அணுக்கருக்களை உருவாக்கும்போதும் ஏராளமான ஆற்றல் வெளிப்படும்

(அணுக்கரு பிளவு – அணு குண்டு) --(2)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

# கதிரியக்க சிதைவு விதியினைத் தருவிக்க

ஒரு குறிப்பிட்ட கணத்தில், ஓரலகு நேரத்தில் நடைபெறும் சிதைவுகளின் எண்ணிக்கை (சிதைவு வீதம் $\left(\frac{dN}{dt}\right)$) ஆனது, அக்கணத்தில் உள்ள அணுக்கருக்களின் எண்ணிக்கைக்கு ( $N$ ) நேர்த்தகவில் இருக்கும். ------ (1)

$$\frac{dN}{dt} \propto N$$

PCB For U

$$\frac{dN}{dt} = -\lambda N \;\Rightarrow\; dN = -\lambda N dt$$ ------(1)

இங்கு பயன்படுத்தப்படும் தகவு மாறிலி λ என்பது சிதைவு மாறிலி என்றழைக்கப்படும்; வெவ்வேறு கதிரியக்கப் பொருள்களுக்கு λ இன் மதிப்பு வெவ்வேறாக இருக்கும். மேலும், இச்சமன்பாட்டில் வரும் எதிர்க்குறியானது நேரம் செல்லச்செல்ல அணுக்கருக்களின் எண்ணிக்கை N இன் மதிப்பு குறையும் என்பதைக் காட்டுகிறது. ----(1)

$$\frac{dN}{N} = -\lambda dt$$

$$\int_{N_0}^{N} \frac{dN}{N} = -\int_{0}^{t} \lambda dt$$

$$\left[\ln N\right]_{N_0}^{N} = -\lambda t$$

$$N = N_0 e^{-\lambda t}$$ ----------(1)




----(1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## ஒரு அரை அலைத் திருத்தியின் படம் வரைந்து அதன் செயல்பாட்டினை விளக்குக




-------(1)




--------(1)

*AC உள்ளீடின் நேர் அரை அலையோ அல்லது எதிர் அரை அலையோ செலுத்தப்பட்டு உள்ளீட்டின் ஒரு பகுதி மட்டுமே வெளியீட்டை அடையும்.

*உள்ளீடு சைகையின் நேர் அலையின்போது A முனையானது B முனையைப் பொருத்து நேர்மின் முனையாக செயல்படுகிறது

PCB For U

*டையோடானது முன்னோக்குச் சார்பில் அமைந்து மின்னோட்டத்தைக் கடத்துவதால் பளு மின்தடை வழியாக வெளியீடு கிடைக்கும்.

*உள்ளீடு சைகையின் எதிர் அலையின்போது A முனையானது B முனையைப் பொருத்து எதிர்மின்முனையாக செயல்படும்.

*டையோடானது பின்னோக்குச் சார்பில் அமைந்து மின்னோட்டத்தைக் கடத்தாது.

*டையோடின் பின்னோக்கு மின்னோட்டம் புறக்கணிக்கத்தக்கது

*முன்னோக்குச் சார்பில் கிடைக்கும் வெளியீடு சுழியில் தொடங்கி குறிப்பிட்ட மதிப்பு வரை அதிகரித்து மீண்டும் சுழியாகும் வரை குறையும்.

*பயனுறு திறன் = **40.6%**

---

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

# ஒரு முழு அலைத் திருத்தியின் படம் வரைந்து அதன் செயல்பாட்டினை விளக்குக




------(1)




-----(1)

*AC உள்ளீட்டின் நேர் மற்றும் எதிர் அரை அலை முழுவதும் திருத்தப்பட்டு வெளியீட்டை அடையும்.

*இரு PNசந்தி டையோடுகள்,மையச்சாவி மின்மாற்றி மற்றும் ஒரு பளு மின் தடை ஆகியவை உள்ளன.மைய முனை தரை இணைப்பு (சுழி மின்னழுத்தப்புள்ளி) செய்யப்பட்டுள்ளது .

PCB For U

| உள்ளீடு நேர் அரை அலை | உள்ளீடு எதிர் அரை அலை |
|---|---|
| *M-நேர் மின்முனை,<br>C- சுழி மின்னழுத்தம்,<br>N – எதிர் மின்முனை | *M-எதிர் மின்முனை,<br>C-சுழி மின்னழுத்தம்,<br>N-நேர் மின்முனை |
| *D1-முன்னோக்குச் சார்பு<br>D2-பின்னோக்குச் சார்பு | *D1-பின்னோக்குச் சார்பு,<br>D2-முன்னோக்குச் சார்பு |
| *D1 மின்னோட்டத்தை<br>*MD1ABC* வழியே கடத்தும் | *D2 மின்னோட்டத்தை<br>**ND2ABC** வழியே கடத்தும் |

Padasalai

*பயனுறு திறன் **81.2%** ------(1)

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

# டிரான்சிஸ்டர் சாவியாக செயல்படுவதை விவரி

- தெவிட்டிய நிலையில் மூடிய சாவியாகவும் ,வெட்டு நிலையில் திறந்த சாவியாகவும் செயல்படும்
- ஒரு சிறு கட்டுப்படுத்தும் சைகை மூலம் டிரான்சிஸ்டரானது தெவிட்டிய நிலை அல்லது வெட்டு நிலையில் வைக்கப்படுகிறது -------(1)




---(1)

$V_0 = V_{CC} - I_C R_C$

-------(1)

| **உள்ளீடு சைகை சுழியாக உள்ளபோது** | **உள்ளீடு சைகை அதிகமாக உள்ளபோது** |
|---|---|
| *உள்ளீடு மின்னழுத்தம் சுழி | *உள்ளீடு மின்னழுத்தம் +5V |
| *அடிவாய் மின்னோட்டம் சுழி | *அடிவாய் மின்னோட்டம் அதிகரிக்கும் |
| *டிரான்சிஸ்டர் வெட்டு நிலையில் இருக்கும் | *டிரான்சிஸ்டர் தெவிட்டிய நிலையில் இருக்கும் |
| *ஏற்பான் மின்னோட்டம் சுழியாகும் | *ஏற்பான் மின்னோட்டம் பெரும மதிப்பை அடையும் |
| *Rc ன் குறுக்கே மின்னழுத்த இறக்கம் சுழி | *Rcன் குறுக்கே மின்னழுத்த இறக்கம் அதிகரிக்கும் |
| *வெளியீடு மின்னழுத்தம் உயர்ந்து V cc க்கு சமமாகும் | *வெளியீடு மின்னழுத்தம் குறைந்து சுழியை நெருங்கும். |
| *டிரான்சிஸ்டர் வழியாக எவ்வித மின்னோட்டமும் பாயாமல், இயங்கா நிலையில் திறந்த சாவியாக செயல்படும் | *டிரான்சிஸ்டர் வழியாக பெரும மின்னோட்டம் பாய்ந்து இயங்கு நிலைக்கு செல்கிறது |

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## டிரான்சிஸ்டர் பெருக்கியாக செயல்படுவதை விவரி



----(1)



-----(1)

PCB For U

*டிரான்சிஸ்டரின் செயல்படும் புள்ளி (Q புள்ளி) தெவிட்டிய புள்ளிக்கு அருகிலோ அல்லது வெட்டுப் புள்ளிக்கு அருகிலோ இல்லாமல் நிலைநிறுத்தப்படுகிறது.

*Rc – வெளியீடு மின்னழுத்தத்தை அளவிட ஏற்பான் தொடர் இணைப்பில் உள்ளது

*R1,R2 மற்றும் RE - சார்பளிக்கும் மற்றும் நிலைநிறுத்தும் மின்சுற்றை உருவாக்குகின்றன

*C1 - AC மின்னழுத்தத்தை மட்டும் அனுமதிக்கும்

*CE –பெருக்கப்பட்ட AC சைகைக்கு குறைந்த மின்மறுப்புப் பாதையை அளிக்கிறது

*Cc –பெருக்கியின் ஒரு நிலையை அடுத்த நிலையுடன் இணைத்து பல்நிலைப் பெருக்கியை உருவாக்குகிறது.----(1)

| **உள்ளீடு சைகையின் நேர் அரை அலையின் போது** | **உள்ளீடு சைகையின் எதிர் அரை அலையின் போது** |
|---|---|
| *உமிழ்ப்பான்-அடிவாய்க்குக் குறுக்கே முன்னோக்கு மின்னழுத்தம் அதிகரிக்கப்படும் | *உமிழ்ப்பான்-அடிவாய்க்குக் குறுக்கே முன்னோக்கு மின்னழுத்தம் குறைக்கப்படும். |
| *அடிவாய் மின்னோட்டம் அதிகரிக்கும் | *அடிவாய் மின்னோட்டம் குறையும். |
| *Rcன் குறுக்கே மின்னழுத்த இறக்கம் அதிகரித்து,ஏற்பான் –உமிழ்ப்பான் மின்னழுத்த வேறுபாடு குறையும் | *Rc ன் குறுக்கே மின்னழுத்த இறக்கம் குறைந்து ஏற்பான் –உமிழ்ப்பான் மின்னழுத்த வேறுபாடு அதிகரிக்கும். |
| *நேர் அரை உள்ளீடு சைகை பெருக்கப்பட்டு எதிர் அரை வெளியீடு சைகையாக $180^0$ திருப்பப்படுகிறது | *எதிர் அரை உள்ளீடு சைகை பெருக்கப்பட்டு நேர் அரை வெளியீடு |

**ஏற்பான் மின்னோட்டம்** $I_C = \beta I_B \left[\because \beta = \frac{I_C}{I_B}\right]$

**ஏற்பான்–உமிழ்ப்பான் மின்னழுத்தம்** $V_{CE} = V_{CC} - I_C R_C$ ------(1)

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**


Scanned with OKEN Scanner

# டீ மார்கனின் தேற்றங்களைக் கூறி நிறுவுக

**முதல் தேற்றம் :**

இரு உள்ளீடுகளின் கூடுதலின் நிரப்பியானது அவற்றின் நிரப்பிகளின் பெருக்கற்பலனுக்கு சமமாகும்.




PCB For U

$$\overline{A+B} = \overline{A} \cdot \overline{B}$$ ------(1)

| A | B | A+B | $\overline{A+B}$ | $\overline{A}$ | $\overline{B}$ | $\overline{A}.\overline{B}$ |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 1 | 1 | 1 | 1 |
| 0 | 1 | 1 | 0 | 1 | 0 | 0 |
| 1 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 |
| 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 |

-----(1 1/2)

ஒரு **NOR** கேட்டானது ஒரு குமிழ் இணைக்கப்பட்ட **AND** வாயிலுக்கு சமம்.

**இரண்டாவது தேற்றம்**

இரு உள்ளீடுகளின் பெருக்கலின் நிரப்பியானது அவற்றின் நிரப்பிகளின் கூடுதலுக்கு சமமாகும்.




$$\overline{A.B} = \overline{A} + \overline{B}$$ -------(1)

| A | B | A.B | $\overline{A.B}$ | $\overline{A}$ | $\overline{B}$ | $\overline{A}+\overline{B}$ |
|---|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 1 | 1 | 1 | 1 |
| 0 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| 1 | 0 | 0 | 1 | 0 | 1 | 1 |
| 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 |

-----(1 ½)

ஒரு **NAND** கேட்டானது ஒரு குமிழ் இணைக்கப்பட்ட **OR** வாயிலுக்கு சமம்.

Padasalai

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

## கூட்டு நுண்ணோக்கியின் அமைப்பு மற்றும் செயல்படும் விதத்தை விவரி.




---(1)

* பொருளருகு லென்ஸ், பொருளின் உருப்பெருக்கப்பட்ட தலைகீழ் மெய் பிம்பத்தை தோற்றுவிக்கிறது.

* இப்பிம்பம்பம் கண்ணருகு லென்சுக்கு பொருளாக செயல்படுகிறது.

* கண்ணருகு லென்ஸ் எளிய நுண்ணோக்கி போன்று செயல்பட்டு பெரிய மாய பிம்பத்தை தோற்றுவிக்கிறது. ------(1)

பொருளருகு லென்சின் உறுபெருக்கம்,

$$m_o = \frac{h'}{h}$$

PCB For U

$$\tan\beta = \frac{h}{f_o} = \frac{h'}{L}$$ (படத்திலிருந்து)

$$\frac{h'}{h} = \frac{L}{f_o}$$

$$m_o = \frac{L}{f_o}$$ -----(1/2)

பிம்பம் அண்மைப்புள்ளியில் அமைந்தால், கண்ணருகு லென்சின் உருப்பெருக்கம்,

$$m_e = 1 + \frac{D}{f_e}$$ ------(1/2)

அண்மைப்புள்ளி குவியப்படுத்லின் மொத்த உருப்பெருக்கம் ,

$$m = m_o m_e = \left(\frac{L}{f_o}\right)\left(1 + \frac{D}{f_e}\right)$$ ------(1)

இறுதி பிம்பம் ஈறிலா தொலைவில் இருந்தால்,

$$m_e = \frac{D}{f_e}$$

இயல்பு நிலை குவிய்ப்படுத்தலின் மொத்த உருப்பெருக்கம்,

$$m = m_o m_e = \left(\frac{L}{f_o}\right)\left(\frac{D}{f_e}\right)$$ ---(1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

**யங் இரட்டைப்பிளவு சோதனையில் பட்டை அகலம் கன்பதற்கான கோவையைப் பெறுக.**




--(1)

$S_1$ மற்றும் $S_2$ -ஓரியல் மூலங்கள்

*D* –பிளவு அமைப்புக்கும் திரைக்கும் இடையே உள்ள தொலைவு

d- பிளவுகளுக்கு இடையே உள்ள தொலைவு

*திரையின் மையப்புள்ளி $S_1$ மற்றும் $S_2$ லிருந்து சம தொலைவில் உள்ளது.

$$\delta = S_2P - MP = S_2M$$

$$\angle OCP = \angle S_2S_1M = \theta$$

$\delta = d \sin \theta$ ; $\sin \theta = y/D$

பாதை வேறுபாடு, $\delta = \frac{d\,y}{D}$ ----- (1)

பாதைவேறுபாடு, $\delta = n\lambda$ (பொலிவு பட்டைக்கு)

இங்கு, $n = 0, 1, 2, \ldots$

Padasalai

$$y_n = n\frac{\lambda D}{d}$$ --------(1)

PCB For U

பாதை வேறுபாடு, $\delta = (2n-1)\frac{\lambda}{2}$ ( கரும்பட்டைக்கு)

இங்கு, $n = 1, 2, 3 \ldots$

$$\therefore \frac{d\,y}{D} = (2n-1)\frac{\lambda}{2}$$

$$y_n = \frac{(2n-1)}{2}\frac{\lambda D}{d}$$ -------(1)

$$\beta = \frac{\lambda D}{d}$$ --------- (1)



Scanned with OKEN Scanner

# மில்லிக்கனின் எண்ணெய் துளி ஆய்வு




PCB For U



(அ)

*மின்புலம் அற்ற நிலையில்*, எண்ணெய் துளி மீது செயல்படும்,

புவி ஈர்ப்பு விசை, $F_g = \rho\left(\frac{4}{3}\pi r^3\right)g$

மிதப்பு விசை $F_b = \sigma\left(\frac{4}{3}\pi r^3\right)g$

பாகியல் விசை, $F_v = 6\pi r\upsilon\eta$

விசைகளின் சமநிலைக்கான சமன்பாடு, $F_g = F_b + F_\upsilon$

$$\frac{4}{3}\pi r^3(\rho-\sigma)g = 6\pi r\upsilon\eta$$

Padasalai

$$r = \left[\frac{9\eta\upsilon}{2(\rho-\sigma)g}\right]^{\frac{1}{2}}$$



(ஆ)

* எண்ணெய் துளிகளை சுற்றி **மின்புலத்தை ஏற்படுத்தும்போது**, சமநிலைக்கான சமன்பாடு,

$$F_e + F_b = F_g$$

$$\Rightarrow qE + \frac{4}{3}\pi r^3\sigma g = \frac{4}{3}\pi r^3\rho g$$

$$\Rightarrow qE = \frac{4}{3}\pi r^3(\rho-\sigma)g$$

$$q = \frac{18\pi}{E}\left(\frac{\eta^3\upsilon^3}{2(\rho-\sigma)g}\right)^{\frac{1}{2}}$$

எந்தவொரு எண்ணெய் துளியின் மின்னூட்ட மதிப்பும் $-1.6\times10^{-19}C$ மதிப்பின் முழு மடங்குகளாக இருந்தன.

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## கால்வனா மீட்டர் ஒன்றை அம்மீட்டராக மாற்றும் முறையை விளக்குக

*கால்வனா மீட்டருடன் பக்க இணைப்பில் குறைந்த மின்தடையை இணைத்தடமாக இணைப்பதன் மூலம் அம்மீட்டராக மாற்றலாம் ----(1/2)



அம்மீட்டர்

--(1)

| | |
|---|---|
| $V_{கால்வனோமீட்டர்} = V_{இணைதடம்}$<br>$I_g R_g = (I - I_g)S$<br>இணைத்தடத்தின் மின் தடை<br>$S = \frac{I_g}{(I - I_g)} R_g$ ----(1/2) | கால்வனா மீட்டர் வழியே செல்லும் மின்னோட்டம்<br>$I_g = \frac{S}{S + R_g} I \Rightarrow I_g \propto I$<br>$\frac{1}{R_{தொகு}} = \frac{1}{R_g} + \frac{1}{S} \Rightarrow R_{தொகு} = \frac{R_g S}{R_g + S} = R_a$ --(1/2) |

*ஓர் நல்லியல்பு அம்மீட்டர் சுழி மின்தடையைப் பெற்றிருக்கும் -----*(1/2)*

## கால்வனா மீட்டர் ஒன்றை வோல்ட் மீட்டராக மாற்றும் முறையை விவரி

* ஒரு கால்வனா மீட்டருடன் தொடர் இணைப்பில் உயர் மின்தடையை இணைப்பதன் முலம் அதனை வோல்ட் மீட்டராக மாற்றலாம்.

PCB For U

---(1/2)



வோல்ட் மீட்டர்

---(1)

| | |
|---|---|
| $I = I_g$ கால்வனா மீட்டர் வழியே செல்லும் மின்னோட்டம்<br>$I_g = \frac{V}{R_g + R_h} \Longrightarrow I_g \propto V$<br>$R_h = \frac{V}{I_g} - R_g$ ---- (1/2) | வோல்ட் மீட்டரின் மின் தடை<br>$R_v = R_g + R_h$<br>---(1/2) |

*ஓர் நல்லியல்பு வோல்ட் மீட்டர் ஈறிலா மின்தடையைப் பெற்றிருக்கும். ------*(1/2)*

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## நிகோல் பட்டகம்




-------(1)

ஒளியியல் கருவிகளுடன் இணைந்து முழுவதும் தள விளைவு அடைந்த ஒளியை உருவாக்கவும் ஆய்வு செய்து பார்க்கவும் பயன்படுகிறது

**அமைப்பு :**

*அகலத்தைப் போன்று மூன்று மடங்கு நீளம் கொண்ட கால்சைட் படிகம் மூலைவிட்டத்தின் வழியே $72^0$ மற்றும் $108^0$ உள்ளவாறு இரு துண்டுகளாக வெட்டப்பட்டு கனடா பால்சம் என்ற ஒளிபுகும் சிமென்ட் கொண்டு ஒட்டப்படுகின்றன. ------- (1)

PCB For U

**செயல்படும் விதம்:** தள விளைவற்ற ஒளி நிகோல் பட்டகத்தின் மீது விழும்போது இரட்டை ஒளிவிலகல் அடைந்து சாதாரண (ஒளி விலகல் எண் **1.658**) மற்றும் அசாதாரண கதிர்களாக(ஒளி விலகல் எண் **1.486**) பிரிகை அடைகிறது.

*ஒளி விலகல் எண் **1.523** கொண்ட கனடா பால்சத்தினால் சாதாரண ஒளி முழு அக எதிரொளிப்பு அடைந்து படிகத்தின் மற்றொரு முகம் வழியாக வெளியேறாமல், முழு தளவிளைவு அடைந்த அசாதாரண ஒளி மட்டும் படிகத்தின் வழியாக வெளியேறுகிறது. --------- (1)

## புரூஸ்டர் விதியைக் கூறி நிறுவுக




---(1)

$$r_p = 90^0 - i_p$$ ------(1/2)

**ஸ்நெல் விதியிலிருந்து ஒளி விலகல் எண்,**

$$\frac{\sin i_p}{\sin r_p} = n$$ ------(1/2)

$$\frac{\sin i_p}{\sin(90^\circ - i_p)} = \frac{\sin i_p}{\cos i_p} = n$$

$$\tan i_p = n$$

**ஒளிபுகும் ஊடகத்தின்,தள விளைவு கோணத்தின் டேஞ்சன்ட் மதிப்பு அந்த ஊடகத்தின் ஒளி விலகல் எண்ணிற்கு சமமாகும்.** --------- (1)



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

**தட்டடுக்குகள் பற்றி விளக்குக.**




**தத்துவம்**

புரூஸ்டர் விதி ----(1)

**அமைப்பு**

* ஒவ்வொன்றும் கிடைமட்டத்துடன் $90^0 - i_p$ கோணத்தில் உள்ளவாறு பல கண்ணாடி தட்டுகள் ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

* இணை ஒளிக்கதிர்கள் தட்டடுக்குகளின் மீது $i_p$ கோணத்தில் விழுவதை இவ்வமைப்பு உறுதி செய்கிறது. ------- *(1)*

**செயல்படும் விதம்**

* அடுத்தடுத்த தட்டுகளின் வழியே தளவிளைவற்ற ஒளி செல்லும்போது விலகலடைந்த ஒளியில் பரப்புக்கு இணையாக உள்ள அதிர்வுகள் அடுத்தடுத்த தட்டுகளில் மேலும் எதிரொளிப்பு அடைகின்றன .

* இதனால் எதிரொளிப்பு அடைந்த கதிரும் விலகலடைந்த கதிரும் முழுவதும் தளவிளைவு அடைகின்றன.--------*(1)*

**டி ப்ராய் அலைநீளத்திற்கான கோவையைப் பெறுக**

v அதிர்வெண் கொண்ட ஃபோட்டானின் உந்தம்,

$$p = \frac{hv}{c} = \frac{h}{\lambda}$$ ------(1)

$$\lambda = \frac{h}{p}$$ -----(1)

m நிறையும் v வேகமும் கொண்ட பருப்பொருளின் அலை நீளம்

$$\lambda = \frac{h}{mv} = \frac{h}{p}$$ -----(1)

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## எலெக்ட்ரானின் டி ப்ராய் அலைநீளத்திற்கான கோவையைப் பெறுக

**m** நிறை கொண்ட எலெக்ட்ரான் *V* வோல்ட் மின்னழுத்த வேறுபாட்டினால் முடுக்கப்ப்படும்போது பெறும் இயக்க ஆற்றல்,

$$\frac{1}{2}mv^2 = eV$$ -----(1/2)

எலெக்ட்ரானின் திசைவேகம்,

$$v = \sqrt{\frac{2eV}{m}}$$ ------ (1/2)

எலெக்ட்ரானின் டி ப்ராய் அலைநீளம் ,

$$\lambda = \frac{h}{mv} = \frac{h}{\sqrt{2emV}}$$

PCB For U

Padasalai

$$\lambda = \frac{12.27}{\sqrt{V}} \text{Å}$$ **------(1)**

$$\lambda = \frac{h}{\sqrt{2mK}}$$ ------(1/2)

$eV = K$ -எலெக்ட்ரானின் இயக்க ஆற்றல் --- **(1/2)**

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

# வேறுபாடுகள்

| கூலும் விசை | புவி ஈர்ப்பு விசை |
|---|---|
| * இரு மின்னூட்டங்களுக்கு இடையே நடைபெறும் .<br>*கவரும் விசையாகவோ அல்லது விரட்டு விசையாகவோ அமையும்.<br>*ஊடகத்தின் தன்மையை சார்ந்தது, | * இரு நிறைகளுக்கு இடையே நடைபெறும் .<br>*கவரும் விசையாக மட்டுமே இருக்கும்.<br>*ஊடகத்தின் தன்மையைச் சார்ந்ததல்ல . |

PCB For U

| ஓம் விதிக்கு உட்படும் பொருட்கள் | ஓம் விதிக்கு உட்படாத பொருட்கள் |
|---|---|
| *V−I வரைபடம் நேர்கோடாக இருக்கும்<br>* ஓம் விதிக்கு உட்படும்.<br>* மின்தடை மதிப்பு மாறிலி | * V-I வரைபடம் நேர்கோடாக இருக்காது.<br>* ஓம் விதிக்கு உட்படாது.<br>* மின்தடை மதிப்பு மாறிலி அல்ல. |

Padasalai

| இழுப்பு திசைவேகம் | இயக்க எண் |
|---|---|
| * கடத்தியில் உள்ள எலெக்ட்ரான்களை மின்புலத்திற்கு உட்படுத்தும் போது அவை பெறும் சராசரி திசைவேகம்.<br>* அலகு $ms^{-1}$ | * ஓரலகு மின்புலத்தினால் ஏற்படும் இழுப்பு திசைவேகத்தின் எண் மதிப்பு<br>*அலகு $m^2V^{-1}s^{-1}$ |

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| ஏற்று மின்மாற்றி | இறக்கு மின்மாற்றி |
|---|---|
| * மின்னழுத்த வேறுபாடு அதிகரிக்கும் , மின்னோட்டம் குறையும் .<br>*முதன்மைச் சுருளைப் பொருத்து துணைச் சுருளின் எண்ணிக்கை அதிகம்.<br>*மின்னழுத்த மாற்ற விகிதம் K>1 | * மின்னழுத்த வேறுபாடு குறையும், மின்னோட்டம் அதிகரிக்கும்.<br>*முதன்மைச் சுருளைப் பொருத்து துணைச் சுருளின் எண்ணிக்கைக் குறைவு.<br>*மின்னழுத்த மாற்ற விகிதம்K<1 |

| குறுக்கீட்டு விளைவு | விளிம்பு விளைவு |
|---|---|
| * இரு ஓரியல் அலைகள் மேற்போருந்துவதால் ஏற்படுகின்றன.<br>* இரு வெவ்வேறு ஓரியல் மூலங்களிலிருந்து வரும் அலைமுகப்புகள் மேற்பொருந்துகின்றன.<br>*சம இடைவெளிகளில் பட்டைகள் தோன்றுகின்றன.<br>*பொலிவுப்பட்டைகள் ஒரே ஒளிச் செறிவைப் பெற்றிருக்கும்.<br>* ஒளிப்பட்டைகளின் எண்ணிக்கை அதிகம். | *தடையின் விளிம்பில் ஒளி அலைகள் வளைந்து செல்வதால் ஏற்படுகின்றன.<br>*ஒரே அலைமுகப்பில் உள்ள பல்வேறு புள்ளிகளிலிருந்து வரும் அலைமுகப்புகள் மேற்பொருந்துகின்றன.<br>*சமமற்ற இடைவெளிகளில் பட்டைகள் தோன்றுகின்றன.<br>*உயர் வரிசை பட்டைகளின் ஒளிச்செறிவு வேகமாய்க் குறையும்.<br>*ஒளிப்பட்டைகளின் எண்ணிக்கை குறைவு. |

Padasalai
PCB For U

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

| சௌனர் முறிவு | சரிவு முறிவு |
|---|---|
| * மிக அதிக அளவு மாசூட்டப்பட்ட PN சந்தி. | * குறைந்த அளவு மாசூட்டப்பட்ட PN சந்தி. |
| *மெல்லிய இயக்கமில்லாப் பகுதி இருக்கும். | *தடிமனான இயக்கப் பகுதி இருக்கும். |
| *மிக வலிமையான மின்புலத்தால் சௌனர் முறிவு ஏற்படும். | *வெப்பத்தினால் உருவாக்கப்பட்ட சிறுபான்மை ஊர்திகளால் ஏற்படும். |

PCB For U

| உள்ளார்ந்த குறைக்கடத்தி | புறவியலான குறைக்கடத்தி |
|---|---|
| * மாசு எதையும் கலக்காத தூய குறைக்கடத்தி. | *மாசு அணுக்கள் சேர்க்கப்பட்ட குறைக்கடத்தி. |
| *கடத்து பட்டையிலுள்ள எலெக்ட்ரான் எண்ணிக்கையும், இணைதிறன் பட்டையிலுள்ள துளைகளின் எண்ணிக்கையும் சமம். | *சமமாக அமையாது. |
| *குறைந்த மின்கடத்து திறன் கொண்டது. | *அதிக மின்கடத்து திறன கொண்டது. |

Padasalai

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

| கட்ட பண்பேற்றம் (PM) | அதிர்வெண் பண்பேற்றம் |
|---|---|
| *சிறிய பட்டை அகலத்தை பயன்படுத்தும். | *அகலமான பட்டை அகலத்தை பன்படுத்தும். |
| *பரப்புகை வேகம் அதிகம். | *பரப்புகை வேகம் குறைவு. |
| *அதிக தகவலை அனுப்பலாம். | *குறைந்த தகவலை அனுப்பலாம். |

| ப்ரெனல் விளிம்பு விளைவு | ப்ரானோஃபர் விளிம்பு விளைவு |
|---|---|
| *கோளக அல்லது உருளை வடிவ அலைமுகப்பு விளிம்பு விளைவிற்கு உட்படுகிறது. | *சமதள அலைமுகப்பு விளிம்பு விளைவிற்கு உட்படுகிறது. |
| *ஒளிமூலம் வரம்பிற்குட்பட்ட நிலையில் இருக்கும். | *ஒளிமூலம் ஈறிலா தொலைவில் இருக்கும். |
| *குவிலென்ஸ் பயன்படுத்தப்படவில்லை. | *குவிலென்ஸ் பயன்படுத்தப்படுகிறது. |
| *உற்று நோக்கல் மற்றும் ஆய்வு செய்வது கடினம். | *உற்றுநோக்கல் மற்றும் ஆய்வு செய்வது எளிது. |

PCB For U

Padasalai

| தள விளைவு அடைந்த ஒளி | தளவிளைவு அடையாத ஒளி |
|---|---|
| *ஒரே ஒரு தளத்தில் மட்டும் அதிர்வுகளைப் பெற்றிருக்கும். | *அனைத்து திசைகளிலும் அதிர்வுகள் சமமாக பங்கிடப்பட்டிருக்கும். |
| *சமச்சீரற்றது | *சமச்சீரானது. |
| *தளவிளைவாக்கி பயன்படுத்தபடுகிறது. | *மரபானஒளிமூலங்களிலிருந்து பெறப்படுகிறது. |

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

# விதிகள் :

**காஸ் விதியைக் கூறு**

**மூடிய பரப்பினால் Q மின்னூட்டம்** கொண்ட ஒரு மின்துகள் சூழப்பட்டிருப்பின் அம்மூடியப்பரப்பிற்கான மொத்த மின்பாயம்

$$\Phi_E = \oint \vec{E} \cdot d\vec{A} = \frac{Q_{உள்}}{\varepsilon_0}$$

PCB For U

## கிர்க்காஃப் முதல் விதி/மின்னோட்ட விதி/சந்தி விதி

*எந்த ஒரு சந்தியிலும் சந்திக்கின்ற மின்னோட்டங்களின் குறியியல் கூ ட்டுத்தொகை சுழியாகும்.

- $\Sigma I = 0$

## கிர்க்காஃப் இரண்டாவது விதி /மின்னழுத்த வேறுபாட்டு விதி/சுற்று விதி

*எந்தவொரு மூடிய சுற்றின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மின்னோட்டம் மற்றும் மின்தடை ஆகியவற்றின் பெருக்கற்பலன்களின் குறியியல் கூட்டுத்தொகையானது அந்த மின்சுற்றில் உள்ள மின்னியக்கு விசைகளின் குறியியல் கூட்டுத்தொகைக்குச் சமம்.

$\Sigma\ IR = \Sigma\ \varepsilon$

## டேஞ்சன்ட் விதியைக் கூ றுக

ஒன்றுக்கொன்று செங்குத்தாக செயல்படும் இரண்டு காந்தப் புலங்களுக்கு நடுவே தொங்க விடப்பட்டுள்ள காந்த ஊசி இவ்விரண்டு புலன்களின் தொகுபயன் புலத்தின் திசையில் அமையும்.

$B = B_H \tan\theta$

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## ஜூல் வெப்ப விதியைக் கூறுக.

ஒரு மின்சுற்றில் மின்னோட்டம் பாய்வதால் உருவாகும் வெப்பமானது,

*மின்னோட்டத்தின் இருமடிக்கு நேர்த்தகவிலும்

*மின்சுற்றின் மின்தடைக்கு நேர்த்தகவிலும்

*மின்னோட்டம் பாயும் நேரத்திற்கு நேர்த்தகவிலும் அமையும்

$$H = I^2Rt$$

PCB For U

## பிளேமிங்கின் இடது கை விதியைக் கூறு

ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ளவாறு இடது கையின் ஆள்காட்டி விரல் ,நடு விரல் மற்றும் பெருவிரலை நீட்டி வைக்கும்போது ஆள்காட்டி விரல் காந்தப்புலத்தின் திசையையும்,நடுவிரல் மின்னோட்டத்தின் திசையையும் காட்டினால்,பெருவிரல் கடத்தி உணரும் விசையின் திசையைக் குறிக்கும்.

## காந்தவியலில் கியூரி விதியைக் கூறுக

*காந்த ஏற்புத்திறன் , கெல்வின் வெப்பநிலைக்கு எதிர்த் தகவில் இருக்கும்.

Padasalai

$\chi_m \propto \frac{1}{T}$ அல்லது $\chi_m = \frac{C}{T}$

## வலதுகை பெருவிரல் விதியை கூறு

பெருவிரல் மின்னோட்டம் பாயும் திசையைக் காட்டும் வகையில் , மின்னோட்டம் பாயும் கடத்தியை வலது கையினால் பிடிக்கும்போது கடத்தியைச் சுற்றி பற்றியுள்ள மற்ற விரல்கள் காந்தப்புலக் கோடுகளின் திசையைக் காட்டும்.

## மேக்ஸ்வெல்லின் வலதுகை திருகு விதியைக் கூறுக

மின்னோட்டம் பாயும் திசையில் வலது கை திருகு ஒன்றினை,திருகு இயக்கியினால் முன்னோக்கி முடுக்கும்போது திருகு சுழலும் திசை காந்தப்புலத்தின் திசையைக் கொடுக்கும்.

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

## பயோட்- சாவர்ட் விதியைக் கூறு

மின்னோட்டம் பாயும் கடத்தியின் சிறு கூறினால் உருவாகும் காந்தப்புலத்தின் எண் மதிப்பு,

* மின்னோட்டத்தின் வலிமைக்கு நேர்த்தகவிலும்
* நீளக் கூறின் எண்மதிப்புக்கு நேர்த்தகவிலும்
* $dl$ மற்றும் r க்கு இடையே உள்ள கோணத்தின் சைன் மதிப்புக்கு நேர்த்தகவிலும்
* குறிப்பிட்ட புள்ளிக்கும் , நீளக்கூறுக்கும் இடையே உள்ள தொலைவின் இருமடிக்கு எதிர்த்தகவிலும் இருக்கும்

$$dB \propto \frac{Idl}{r^2}\sin\theta$$

PCB For U

## ஆம்பியரின் சுற்று விதியை கூறு

ஒரு மூடிய சுற்று வளைவின் மீதுள்ள காந்தப்புலத்தின் கோட்டு வழித் தொகையீட்டு மதிப்பு ,சுற்று வளைவினால் மூடப்பட்ட நிகர மின்னோட்டத்தின் μo மடங்கிற்குச் சமம்

Padasalai

$$\oint_C \vec{B}.\vec{dl} = \mu_\circ I_{\text{மூடப்பட்ட}}$$

## பாரடேயின் விதிகளைக் கூறு

**முதல் விதி :**

ஒரு மூடிய சுற்றுடன் தொடர்புடைய காந்தப் பாயம் மாறும் போதெல்லாம் சுற்றில் ஒரு மின்னியக்கு விசை தூண்டப்படுகிறது.

**இரண்டாம் விதி :**

ஒரு மூடிய சுற்றில் தூண்டப்பட்ட மின்னியக்கு விசையின் எண் மதிப்பு காலத்தைப் பொறுத்து சுற்றுடன் தொடர்புடைய காந்தப்பாயம் மாறும் வீதத்திற்கு சமமாகும்.

$$\varepsilon \; \alpha \; \frac{d\Phi_B}{dt}$$

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## லென்ஸ் விதியைக் கூறு

தூண்டப்பட்ட மின்னோ ட்டத்தின் திசையானது அதன் உருவாக்கத்திற்கு காரணமானதை எப்போதும் எதிர்க்கும் விதத்தில் அமையும்.

$$\varepsilon = -\frac{d\Phi_B}{dt}$$

PCB For U

## மாறுதிசை மின்னோட்டத்தின் RMS மதிப்பு – வரையறு

ஒரு சுற்றில் உள்ள அனைத்து மின்னோட்டங்களின் இருமடிகளின் சராசரியின் இருமடி மூலம் என வரையறுக்கப்படுகிறது $I_{RMS} = \frac{I_m}{\sqrt{2}}$

## ஒளி எதிரொளிப்பு விதிகளை எழுதுக

- படுகதிர்,எதிரொளிப்பு கதிர் மற்றும் எதிரொலிக்கும் பரப்புக்கு செங்குத்துக்கோடு இவை அனைத்தும் ஒரே தளத்தில் அமையும்.
- படுகோணம்,எதிரொளிப்பு கோணத்திற்கு சமம்.

## ஒளி விலகல் விதிகளை எழுதுக

- படுகதிர்,விலகு கதிர் விலகு தளத்திற்கு வரையப்பட்ட செங்குத்துகோடு இவை அனைத்தும் ஒரே தளத்தில் அமையும்

## ஸ்நெல் விதி

முதல் ஊடகத்தின் படுகோணத்தின் சைன் மதிப்பிற்கும் இரண்டாவது ஊடகத்தின் விலகு கோணத்தின் சைன் மதிப்பிற்கும் உள்ள விகிதம் ,இரண்டாவது ஊடகத்தின் ஒளிவிலகல் எண்ணிற்கும் ,முதல் ஊடகத்தின் ஒளிவிலகல் எண்ணிற்கும் உள்ள விகிதத்திற்கு சமமாகும்.

$$\frac{\sin i}{\sin r} = \frac{n_2}{n_1}$$

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

## ஹைகென்ஸ் தத்துவத்தை எழுதுக

*அலைமுகப்பிலுள்ள ஒவ்வொரு புள்ளியும் இரண்டாம் நிலை அலைக்குட்டிகளை உருவாக்கும் ஒலிமூலமாக செயல்படும் .

*இப்புள்ளிகளிளிருந்து வெளிவரும் இரண்டாம் நிலை அலைக்குட்டிகள் ஒளியின் வேகத்தில் ஊடகத்தின் அனைத்துத் திசைகளிலும் பரவும்.

*இரண்டாம்நிலை அலைக்குட்டிகளுக்கு வரையப்படும் பொதுவான தொடுகோடு அல்லது இரண்டாம் நிலை அலைக்குட்டிகளின் முன்புற உறை அடுத்து ஏற்படும் புதிய அலைமுகப்பைக் கொடுக்கும்.

## மாலஸ் விதியைக் கூறுக

$I_o$ செறிவு கொண்ட முழுவதும் தளவிளைவு அடைந்த ஒளி,தளவிளைவு ஆய்வியில் விழுந்து I செறிவு கொண்ட ஒளியாக தளவிளைவு ஆய்வியிலிருந்து வெளியேறும்போது அதன் செறிவு, தளவிளைவு ஆக்கி மற்றும் தளவிளைவு ஆய்வியின் பரவு தளங்களுக்கு இடையே உள்ள கோணத்தின் கொசைன் மதிப்பின் இருமடிக்கு நேர்விகிதத்தில் இருக்கும்

$$I \propto (a\cos\theta)^2$$

PCB For U

## ப்ரூஸ்டர் விதியைக் கூ றுக

ஒளிபுகும் ஊடகத்தின் தளவிளைவுக் கோணத்தின் டேஞ்சன்ட் மதிப்பு அந்த ஊடகத்தின் ஒளிவிலகல் எண்ணிற்கு சமம்

$$\tan(i_p) = n$$

## கதிரியக்க சிதைவு விதியை கூ றுக

ஒரு குறிப்பிட்ட கணத்தில் ,ஓரலகு நேரத்தில் நடைபெறும் சிதைவுகளின் எண்ணிக்கை (சிதைவு வீதம் ),அக்கணத்தில் உள்ள அணுக்கருக்களின் எண்ணிக்கைக்கு நேர்விகிதத்தில் இருக்கும்.

$$\frac{dN}{dt} \propto N$$

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## Q- காரணி வரையறு

Q காரணி என்பது L அல்லது C க்கு குறுக்கே உள்ள மின்னழுத்த வேறுபாட்டிற்கும், செலுத்தப்படும் மின்னழுத்த வேறுபாட்டிற்கும் இடையே உள்ள தகவு என வரையறுக்கப்படுகிறது.

$$Q - \text{காரணி} = \frac{L \text{ அல்லது } C \text{ க்கு குறுக்கே மின்னழுத்த வேறுபாடு}}{\text{செலுத்தப்படும் மின்னழுத்த வேறுபாடு}}$$

## மின்புலக்கோடுகள் ஒன்றையொன்று வெட்டிகொள்வதில்லை.ஏன்?

PCB For U

இரு மின்புலக்கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்வதில்லை.அவ்வாறு வெட்டிக்கொண்டால் , ஒரே புள்ளியில் இரு வேறு மின்புல வெக்டர்கள் உள்ள நிலை ஏற்படும்.அவ்வாறு ஏற்பட்டால் அந்தப் புள்ளியில் வைக்கப்படும் ஒரு மின்துகளானது ஒரே நேரத்தில் இருவேறு திசைகளில் நகர வேண்டும்.இது இயற்கையில் நடைபெறாத ஒன்று.எனவே மின்புலக்கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்வதில்லை

## இடி ,மின்னலின் போது மரத்தினடியில் நிற்பதைவிட பேருந்தினுள் இருப்பது பாதுகாப்பானது. ஏன்?

*பேருந்தின் உலோகப்பரப்பு நிலைமின் தடுப்புறையாக செயல்படுகிறது.

*ஏனெனில் அதன் உட்புறத்தில் மின்புல மதிப்பு சுழி.

*மின்னலின்போது கடத்தியின் புறப்பரப்பு வழியே மின்துகள் தரைக்குப் பாய்வதால் பேருந்தினுள் இருப்பவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

## மின் சூடேற்றிகளில் நிக்ரோம் உலோகக் கலவையிலான கம்பிச்சுருள் பயன்படுத்தப்படுவதேன் ?

*நிக்கல் மற்றும் குரோமியத்தால் ஆன நிக்ரோமின் மின்தடை எண் மிக அதிகம்.

*எளிதில் ஆக்ஸிஜனேற்றம் அடையாது.

*அதிக உருகுநிலை கொண்டது.

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

**இயங்கு சுருள் கால்வனா மீட்டரில் பாஸ்பர் வெண்கல இழை பயன்படுத்தப்படுவதேன்?**

ஏனெனில் பாஸ்பர் வெண்கல இழையின் ஓரலகு முறுக்கத்திற்கான இரட்டையின் மதிப்பு மிகக்குறைவு

**அம்மீட்டரை மின்சுற்றில் தொடர் இணைப்பில் இணைக்க வேண்டும்.ஏன்?**

*அம்மீட்டர் மின்சுற்றில் பாயும் மின்னோட்டத்திற்கு குறைவான மின்தடையையே ஏற்படுத்தும்

*அம்மீட்டரை தொடராக இணைக்கும்போது சுற்றின் மின்தடை மற்றும் மின்னோட்டத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தாது.

**வோல்ட் மீட்டரை மின்சுற்றில் பக்க இணைப்பில் இணைக்க வேண்டும்.ஏன்?**

*வோல்ட் மீட்டர் உயர்ந்த மின்தடையைப் பெற்றிருக்கும்.

*இதனை மின்சுற்றில் பக்க இணைப்பில் இணைக்கும்போது குறிப்பிடத்தக்க மின்னோட்டம் எதையும் மின்சுற்றிலிருந்து பெறாது.

*மிகக்குறைந்த மின்னோட்டத்தையே மின்சுற்றிலிருந்து வோல்ட் மிட்டர் பெறும்.

Padasalai

**வைரம் ஜொலிக்கிறது .ஏன் ?**

PCB For U

*வைரத்தின் மாறுநிலைக் கோணம் $24.4^0$

*வைரத்தின் உள்ளே நுழைந்த ஒளி வெளியேறுவதற்கு முன்பாக உட்புறமுள்ள வெட்டு முகங்களில் பல முறை முழு அக எதிரொளிப்பு அடைகிறது.

*உட்புகுந்த ஒளி வைரத்தினுள் பல முறை முழு அக எதிரொளிப்பு அடைவதே வைரம் ஜொலிப்பதற்கு காரணம்.

**சூரியன் உதிக்கும்போதும் மறையும்போதும் வானம் சிவப்பு நிறமாக இருப்பது ஏன்?**

*சூரிய உதயம் மற்றும் மறையும் நேரங்களில் சூரிய ஒளி வளிமண்டலம் வழியே மிக நீண்ட தொலைவு செல்ல வேண்டியுள்ளது.

*எனவே குறைந்த அலைநீளமுடைய நீல ஒளி சிதறலடைந்து விடும்,குறைவாக சிதறல் அடையும் சிவப்பு ஒளி நமது கண்களை அடையும்.

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

**பகல் நேரத்தில் வானம் நீல நிறமாக காட்சியளிக்கிறது ஏன்?**

*பகல் நேரத்தில் குறைந்த அலைநீளமுடைய நீல வண்ணம் வளிமண்டலத் துகள்களினால் வளிமண்டலம் முழுவதும் சிதறடிக்கப்படுகிறது .

*நமது கண்களின் உணர்வு நுட்பம் ஊதா வண்ணத்தை விட நீல வண்ணத்திற்கு அதிகம் .இத்தகைய காரணங்களினால் வானம் நீல நிறமாக காட்சியளிக்கிறது

**சூரியன் உதிக்கும்போதும் மறையும்போதும் வானம் சிவப்பு நிறமாக இருப்பது ஏன்?**

*சூரிய உதயம் மற்றும் மறையும் நேரங்களில் சூரிய ஒளி வளிமண்டலம் வழியே மிக நீண்ட தொலைவு செல்ல வேண்டியுள்ளது

*எனவே குறைந்த அலைநீளமுடைய நீல ஒளி சிதறலடைந்து விடும்,குறைவாக சிதறல் அடையும் சிவப்பு ஒளி நமது கண்களை அடையும்

## வரம்புகள் மற்றும் குறைபாடுகள்

PCB For U

**சைக்ளோட் ரானின் வரம்புகள் யாவை?**

Padasalai

- அயனியின் வேகம் வரம்புக்குட்பட்டது
- எலெக்ட்ரானை முடுக்குவிக்க இயலாது
- மின்னூட்டமற்ற துகள்களை முடுக்குவிக்க இயலாது

**ஜே.ஜே.தாம்சன் அணு மாதிரியின் குறைபாடுகள் யாவை?**

*அணுவின் மின் நடுநிலைத் தன்மையை விளக்கவில்லை

*அணுவின் சமநிலைத் தன்மையை விளக்கவில்லை

*ஹைட்ரஜன் மற்றும் பிற அணுக்களின் நிறமாலை வரிகளின் தோற்றத்தை விளக்கவில்லை

**ரூதர்போர்ர்டு அணுமாதிரியின் குறைபாடுகள் யாவை?**

*அணுக்கருவைச் சுற்றி எலெக்ட்ரான்களின் பரவல் மற்றும் அணுவின் நிலைத்தன்மை பற்றி விளக்க இயலவில்லை

*அணுக்கள் வரி நிறமாலையைத் தரும்.ஆனால் ரூதர்போர்டு அணுமாதிரிப்படி கதிர்வீச்சின்நிறமாலை தொடர் வெளிவிடு நிறமாலை என அறியப்பட்டது

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

**போர் அணுமாதிரியின் குறைபாடுகள் யாவை?-------(3)**

*ஹைட்ரஜன் அல்லது ஹைட்ரஜனைப் போன்று அணுக்களுக்கு மட்டுமே போர் அணுமாதிரி பொருத்தமானது. பிறசிக்கலான அணுக்களுக்கு இது பொருந்துவதில்லை

*ஹைட்ரஜன் நிறமாலையின் நுண்வரி அமைப்பை விளக்கவில்லை\

*நிரமாலை வரிகளின் செறிவில் காணப்படும் மாற்றங்களுக்கான விளக்கம் போர் அணு மாதிரியால் விளக்க முடியவில்லை

*அணுக்களில் எலெக்ட்ரான் பகிர்வு தொடர்பான முழுமையான விளக்கம் போர் அணுமாதிரியால் தரப்படவில்லை

**அதிர்வெண் பணபேற்றத்தின் வரம்புகள் யாவை?** PCB For U

*மிகவும் அகலமான அலைவரிசை தேவை

*பரப்பிகள் மற்றும் ஏற்பிகள் மிகவும் சிக்கலானவை மற்றும் விலை அதிகமானவை

*AM உடன் ஒப்பிடும்போது ஏற்கும் பரப்பு FM ஏற்பில் குறைவாகும் .

Padasalai

**ஒளி இழைத்தகவல் தொடர்பின் குறைபாடுகள் யாவை?**

*தாமிரக்கம்பிகளுடன் ஒப்பிடும்போது ஒளி இழை வடங்கள் எளிதில் உடையக்கூடியவை

*இதன் தொழில்நுட்பம் விலையுயர்ந்தது.



Scanned with OKEN Scanner

## இதர முக்கியமான வினா விடைகள்

**மின் முனைவாக்கம் என்றால் என்ன?**

மின்காப்பு பொருளில் ஓரலகு பருமனில் தூண்டப்படும் மொத்த இருமுனைத் திருப்புத் திறன் மின் முனைவாக்கம் எனப்படும்.

* இது புற மின்புலத்தின் வலிமைக்கு நேர்த்தகவில் இருக்கும்.

**மின்காப்பு வலிமை என்றால் என்ன?**

மின்காப்பு முறிவு ஏற்படும் முன் மின்காப்பு பொருள் ஒன்று தாங்க்கூடிய பெரும மின்புலம் மின்காப்பு வலிமை எனப்படும்.

**கூர்முனை செயல்பாடு அல்லது ஒளிவட்ட மின்னிறக்கம் என்றால் என்ன?**

* கடத்தியின் கூர்முனைப் பகுதியில் மின்னூட்டங்கள் கசியும் நிகழ்வு

* கூர்முனைப் பகுதியிலுள்ள மொத்த மின்னூட்ட மதிப்பு குறைகிறது

PCB For U

**இழுப்பு திசைவேகம் என்றால் என்ன?**

கடத்தியில் உள்ள எலெக்ட்ரான்களை மின்புலத்திற்கு உட்படுத்தும்போது அவை பெறும் சராசரி திசைவேகம் எனப்படும்.

Padasalai

**சராசரி தளர்வு நேரம் என்றால் என்ன? ------ (2)**

ஒரு கடத்தி மின்புலத்திற்கு உட்படும்போது அதில் உள்ள எலெக்ட்ரான்களின் இரு அடுத்தடுத்த மோதல்களுக்கு இடைப்பட்ட சராசரி நேரம் சராசரி தளர்வு நேரம் எனப்படும்.

**இயக்க எண் – வரையறு .அலகு யாது?**

ஓரலகு மின்புலத்தினால் ஏற்பாடு இழுப்பு திசைவேகத்தின் எண் மதிப்பு

$$\mu = \frac{|\vec{v}_d|}{|\vec{E}|}$$

**இயக்க எண்ணின் SI அலகு** $\frac{m^2}{V\ s}$.



Scanned with OKEN Scanner

**மீளும் கொள்கை என்றால் என்ன?**

ஒளி செல்லும் பாதையின் திசையைப் பின்னோக்கித் திருப்பும்போது ஒளி மிகச் சரியாக தான் கடந்து வந்த பாதையின் வழியாகவே திரும்பிச் செல்லும்

**மாறுநிலைக் கோணம் என்றால் என்ன?**

அடர்மிகு ஊடகத்தில் எந்தப் படுகோனத்திற்கு விலகு கதிர் ஊடகங்களைப் பிரிக்கும் எல்லையைத் தழுவிச் செல்கிறதோ அந்தப் படுகோணமே மாறுநிலைக் கோணம் எனப்படும்.

**முழு அக எதிரொளிப்பு என்றால் என்ன?**

ஒளி அடர்மிகு ஊடகத்திலிருந்து அடர் குறை ஊடகத்திற்கு செல்லும்போது,பிரிகை தளத்தில் படும் ஒளி முழுவதும் அடர்மிகு ஊடகத்திலேயே எதிரொளிக்கும் நிகழ்ச்சிக்கு முழு அக எதிரொளிப்பு என்று பெயர்

PCB For U

**கார்ட்டிசியன் குறியீட்டு மரபுகள் யாவை? ------(3)**

*படும் ஒளியினை இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் எடுக்க வேண்டும் .

Padasalai

*அனைத்து தொலைவுகளும் ஆடி முனையிலிருந்துதான் எடுக்க வேண்டும்

*ஆடி முனைக்கு வலப்புறமாக முதன்மை அச்சுக்கு இணையாக அளக்கப்படும் தூரத்தை நேர்க்குறி தூரமாக கருத வேண்டும்

* ஆடி முனைக்கு இடப்புறமாக முதன்மை அச்சுக்கு இணையாக அளக்கப்படும் தூரத்தை எதிர்க்குறி தூரமாக கருத வேண்டும்

*முதன்மை அச்சுக்கு செங்குத்தாக மேல்நோக்கிய உயரங்களை நேர்க்குறி உயரங்களாக கருத வேண்டும்

*முதன்மை அச்சுக்கு செங்குத்தாக கீழ்நோக்கிய உயரங்களை எதிர்க்குறி உயரங்களாக கருத வேண்டும்

---

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

**ஒளி இழையின் ஏற்பு கோணம் என்றால் என்ன?**

ஒளி இழையின் உட்பகுதியில் உள்ளகம் , வெளிப்பூச்சு சந்திக்கும் பரப்பில் விழும் ஒளிக்கதிரின் படுகோணம் ,மாறுநிலைக் கோணத்தில் இருக்க வேண்டுமெனில் ஒளி இழையின் முனையில் ஒரு குறிப்பிட்ட படுகொணத்தில் ஒளிக்கதிரை செலுத்த வேண்டும். இப்படுகோணத்திற்கு ஒளி இழையின் ஏற்பு கோணம் என்று பெயர்.

**இராலே ஒளிச்சிதறல் என்றால் என்ன?**

*ஒளியின் நீளத்தைவிட மிகவும் குறைவான அளவுடைய அணுக்கள் மற்றும் மூலக்கூ றுகளினால் ஏற்படும் ஒளிச்சிதறலுக்கு இராலே ஒளிச் சிதறல் என்று பெயர்.

*இராலே ஒளிச்சிதறலின் செறிவு அலைநீளத்தின் நான்கு மடி மதிப்புக்கு எதிர்த்தகவில் இருக்கும்

$$I \propto \frac{1}{\lambda^4}$$

PCB For U

**ப்ரநெல் தொலைவு என்றால் என்ன?**

Padasalai

எந்த தொலைவு வரை ஒளி ,கதிர் ஒளியியலுக்கு கட்டுப்படுகிறதோ அல்லது கதிர் ஒளியியலுக்கு கட்டுப்படாமல் அலை ஒளியியலுக்கு கட்டுப்படத் தொடங்குகிறதோ அந்தத் தொலைவே ப்ரநெல் தொலைவு எனப்படும்.

**பரப்பு அரண் என்றால் என்ன?**

உலோகத்தின் மேற்பரப்பிலிருந்து கட்டுறா எலெக்ட்ரான்களை வெளியேறவிடாமல் தடுக்கும் மின்னழுத்த அரண் பரப்பு அரண் எனப்படும்

**வெளியேற்று ஆற்றல் என்றால் என்ன?**

உலோகத்தின் பரப்பிலிருந்து எலெக்ட்ரான்களை வெளியேற்றத் தேவைப்படும் சிறும ஆற்றல் உலோகத்தின் வெளியேற்று ஆற்றல் எனப்படும்

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

**ஒளிமின் விளைவு என்றால் என்ன?**
உலோகத்தட்டு ஒன்றின் மீது தகுந்த அதிர்வெண் கொண்ட ஒளி படும்போது எலெக்ட்ரான்கள் உமிழப்படும் நிகழ்வு ஒளிமின் விளைவு எனப்படும்

**பயன் தொடக்க அதிர்வெண் என்றால் என்ன?**
கொடுக்கப்படும் உலோகப்பரப்பிற்கு படுகதிரின் அதிர்வெண் ஒரு குறிப்பிட்ட சிறும அதிர்வெண்ணை விட அதிகமாக இருந்தால் மட்டுமே எலெக்ட்ரான் உமிழ்வு ஏற்படும். இந்த சிறும அதிர்வெண் பயன்தொடக்க அதிர்வெண் எனப்படும்.

**நிறுத்து மின்னழுத்தம் என்றால் என்ன?**
பெரும இயக்க ஆற்றலைக் கொண்ட எலெக்ட்ரான்களை நிறுத்தி ஒளிமின்னோட்டத்தை சுழியாக்குவதற்கு ஆனோடிற்கு அளிக்கப்படும் எதிர் மின்னழுத்தத்தின் மதிப்பாகும்.

**அயனியாக்க ஆற்றல் என்றால் என்ன?**
அடிநிலையிலுள்ள அணுவின் எலெக்ட்ரான் ஒன்றினை அதிலிருந்து வெளியேற்ற தேவைப்படும் சிறும ஆற்றல் அயனியாக ஆற்றல் எனப்படும்.

## பயன்கள்

Padasalai PCB For U

**மின்தேக்கியின் பயன்கள் யாவை?**

*ஒளிப்படக் கருவியில் தேறிப்பொளி ஏற்படுத்தும் தெறிப்பு மின்தேக்கியாக பயன்படுகிறது.

*இதயத்துடிப்பை இயல்புக்கு கொண்டு வரும் இதய உதறல் நீக்கியில் பயன்படுகிறது.

*எரியூட்டும் அமைப்புகளில் தீப்பொறி உருவாவதைத் தடுக்கப் பயன்படுகிறது.

* மின் வழங்கிகளில் மின்திறன் ஏற்ற இறக்கத்தை குறைக்கப் பயன்படுகிறது.

*மின்திறன் அனுப்பீட்டில் பயனுறுதிறனை அதிகரிக்க பயன்படுகிறது.

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District


Scanned with OKEN Scanner

## சீபெக் விளைவின் பயன்பாடுகள் யாவை?

*வீணாகும் வெப்ப ஆற்றலை மின்னாற்றலாக மாற்றும் வெப்ப மின்னியற்றிகளில் பயன்படுகிறது.

*தானியங்கி வெப்ப மின்னியற்றிகளில் பயன்படுகிறது.

*வெப்ப மின்னிரட்டை மற்றும் வெப்ப மின்னிரட்டை அடுக்குகளில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு இடையே உள்ள வெப்பநிலை வேறுபாட்டை அளவிடப் பயன்படுகிறது.

## போலராய்டுகளின் பயன்கள் யாவை?

- முப்பரிமாண திரைப்படக் காட்சிகளை உருவாக்க பயன்படுகிறது.
- வெயில் காப்புக் கண்ணாடியாகப் பயன்படுகிறது.
- அறையின் உள்ளே வரும் ஒளியின் செறிவைக் கட்டுப்படுத்தப் பயன்படுகிறது.
- பழைய எண்ணெய் ஓவியங்களின் நிறங்களை வேறுபடுத்தி அறியப் பயன்படுகிறது.
- LCD ல் பயன்படும் தளவிளைவு அடைந்த ஒளியை உருவாக்கப் பயன்படுகிறது.

Padasalai

## ஒளி மின்கலத்தின் பயன்பாடுகளை எழுதுக.

PCB For U

*மின் இயக்கிகள் மற்றும் மின் உணர்விகளாகப் பயன்படுத்தபடுகிறது .

*இருள் நேரத்தில் தானாக ஒளிரும் மின்விளக்குகளில் பயன்படு கிறது.

*தெரு விளக்குகள் தானாக ஒளிரவும்,அணையவும் பயன்படுகிறது.

*திரைப் படங்களில் ஒலியினை திரும்பப் பெறுவதற்கு பயன்படுகிறது.

*ஓட்டப்பந்தயங்களில் தடகள வீரர்களின் வேகத்தை அளவிடும் கடிகாரங்களில் பயன்படுகிறது.

*புகைப்படத் துறையில் ஒளிச் செறிவை கணக்கைப் பயன்படுகிறது.

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## X –கதிர்களின் பயன்களை எழுதுக.

*எலும்பு முறிவு, உடலின் உள்ளே உள்ள அந்நிய பொருட்கள் ஆகியவற்றைக் கண்டறியப் பயன்படுகிறது.
*புற்று நோய் கட்டிகளை குணமாக்குவதற்கு பயன்படுகிறது.
*பற்ற வைக்கப்பட்ட இணைப்புகளில் உள்ள விரிசல்கள் மற்றும் டென்னிஸ் பந்துகள் ஆயயவர்ரை சோதனை செய்ய பயன்படுகிறது.
*தடை செய்யப்பட்ட பொருள்களை கண்டுபிடிப்பதற்கு பயன்படுகிறது.
*படிகப் பொருட்களின் கட்டமைப்பை அறிவதற்கு பயன்படுகிறது.

## செனர் டையோடின் பயன்களை எழுதுக.

PCB For U

*மின்னழுத்த கட்டுப்படுத்தியாக செயல்படுகிறது.
*மின்னழுத்தங்களை அளவயும் கருவியாக பயன்படுகிறது.
*சார்பு படுத்தும் மின்சுற்று வலைகளில் குறிப்பு மின்னழுத்தத்தை அளிக்கிறது.
*எதிர்பாராத விதமாக அளிக்கப்படும் அதிகப்படியான மின்னழுத்தங்களினால் கருவிகள் பழுதடையாமல் இருக்க பயன்படுத்தப்படுகிறது.

## வீச்சுப் பண்பேற்றத்தின் நன்மைகள் யாவை?

*எளிதான பரப்புகை மற்றும் ஏற்பு
*குறைவான பட்டை அகலத் தேவை
*குறைந்த விலை

## அதிர்வெண் பண்பேற்றத்தின் நன்மைகள் யாவை?

*இரைச்சல் குறைவு
*செயல்படும் நெடுக்கம் மிக அதிகம்
*பரப்புகை பயனுறுதிறன் மிக அதிகம்
*மனிதனால் கேட்கக் கூடிய அதிர்வெண் நெடுக்கம் முழுவதையும் உள்ளடக்குகிறது.

---

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

## ஒளி இழையின் பயன்கள் யாவை?

*மிகவும் மெலிதானது.தாமிரவட கம்பிகளை விட குறைவான எடை கொண்டது.

*மிக அதிக பட்டை அகலத்தைக் கொண்டுள்ளதால் தகவல் சுமந்து செல்லும் திறன் மிகவும் அதிகம்.

*மின் இடையூறுகளால் பாதிக்கப்படுவதில்லை

*தாமிர வடங்களை விட மலிவானது.

PCB For U

## ரேடாரின் பயன்பாடுகள் யாவை?

*இராணுவத்தில் இலக்குகளை கண்டறியப் பயன்படுகிறது

*கடல் பரப்பில்,வான் பரப்பில் தேடுதல் மற்றும் ஏவுகணை வழி நடத்தும் அமைப்புகளில் பயன்படுகிறது

*மழைப்பொழிவு வீதம் மற்றும் காற்றின் வேகம் அளவிடும் வானிலை கண்காணிப்பில் பயன்படுகிறது

*அவசர காலங்களில் மக்களின் இருப்பிடங்களை கண்டறிந்து மீட்கும் பணியில் பயன்படுகிறது.

## இணையத்தின் பயன்பாடுகள் யாவை?

*உலகளாவிய வலைதளங்களில் தேடுபொறியாக பயன்படுகிறது

*இ–மெயில் , உடனடிச் செய்திகள் போன்ற தகவல் தொடர்புக்கு பயன்படுகிறது

*மின் வணிகம் மூலம் பொருட்களை வாங்குதல் ,

விற்றல்,நிதிப் பரிமாற்றம் போன்றவற்றில் பயன்படுகிறது.

## சூரிய மின்கலத்தின் பயன்பாடுகள் யாவை?

- கணிப்பான்கள் ,கடிகாரங்கள்,பொம்மைகள் ஆகியவற்றில் பயன்படுகின்றன.
- நகரும் மின்வழங்கிகளில் பயன்படுகின்றன.
- செயற்கைக்கோள் மற்றும் விண்வெளி பண்பாடுகளில் பயன்படுகிறது
- சூரியப் பலகைகள் மின்னோட்டத்தை உருவாக்க பயன்படுகின்றன.

**M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District**



Scanned with OKEN Scanner

## பண்புகள்

### மின்காந்த அலைகளின் பண்புகளை எழுதுக.

*முடுக்குவிக்கப்பட்ட மின்துகளிலிருந்து உருவாகப்படுகின்றன.

*பரவுவதற்கு ஊடகம் தேவை இல்லை.

*வெற்றிடத்தில் இதன் வேகம் **$3x10^8$ மீ/வி** ஆகும்.

*மின்புலத்தாலும்,காந்தபுலத்தாலும் விலக்கமடையாது.

*குறுக்கீட்டு விளைவு,விளிம்பு விளைவு மற்றும் தள விளைவுகளை ஏற்படுத்தும்.

### நியூட்ரினோவின் பண்புகளை எழுதுக.

PCB For U

*மின்னூட்டம் சுழி.

*எதிர் நியூட்ரினோ என்ற எதிர் துகளைப் பெற்றுள்ளது.

*புறக்கணிக்கத்தக்க மிகச் சிறிய நிறையைப் பெற்றுள்ளது.

*பருப்பொருளுடன் மிகக் குறைந்த அளவே இடைவினை புரிகிறது.

### அணுக்கரு விசையின் பண்புகள் யாவை?

*மிக வலிமையான ,குறுகிய எல்லை உடைய விசை.

*இது ஒரு கவர்ச்சி விசை.

Padasalai

*(n-n),(p,p),(p-n) இடையே சம வலிமையுடன் செயல்படுகிறது.

### X- கதிர்களின் பண்புகள் யாவை?

- $0.1\ A^0$ முதல் $100\ A^0$ வரை குறைந்த அலைநீளம் உடைய மின்காந்த அலைகள்
- ஒளியின் வேகத்தில் நேர்கோட்டில் பயணம் செய்யும்
- மின் மற்றும் காந்தப்புலங்களால் விலக்கமடையாது.
- அதிக அளவு ஆற்றல் கொண்டவை.
- கண்ணுறு ஒளி புகுந்து செல்லாத பொருள்களின் (எ-டு எழும்பு)வழியாகக் கூட Xகதிர்கள் ஊடுருவிச் செல்லக் கூடியவை

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District



Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## கேத்தோடு கதிர்களின் பண்புகள் யாவை?

*ஆற்றல் மற்றும் உந்தத்தைப் பெற்றுள்ளன.
*நேர்கோட்டில் செல்கின்றன.
*மின் மற்றும் காந்தப்புலங்களால் விளக்கமடைகின்றன.
*புகைப்படத் தகட்டைப் பாதிக்கின்றன.
*ஒளிர்தலை ஏற்படுத்துகின்றன.
*வாயுக்களை அயனியாக்கம் செய்கின்றன.
*பொருள்களின் மீது விழும்போது வெப்பம் உருவாகிறது.

## சமதள ஆடியில் தோன்றும் பிம்பத்தின் பண்புகள் யாவை?

*இடவல மாற்றம் கொண்ட நேரான பிம்பம்
*பொருளின் அளவு = பிம்பத்தின் அளவு
*பொருளின் தொலைவு = பிம்பத்தின் தொலைவு

## நியூ ட்ரான்களின் பண்புகள் யாவை?

Padasalai

*அணுக்கருவினுள் நியூட்ரான்கள் நிலைத்தன்மையுடன் இருக்கின்றன.

*இதன் அரை ஆயுட்காலம் 13 நிமிடங்கள் .

PCB For U

*மின்னூட்டமற்ற துகள்.

*அதிக ஊடுருவு திறன் கொண்டது.

குறைவேக நியூட்ரான்கள் 0 – 1000eV

வேக நியூ ட் ரான்கள் 0.5MeV – 10 MeV

வெப்ப நியூ ட் ரன்கள் 0.025 eV

M.RAMESH,M.Sc.,B.Ed.,M.Phil.,P.G.Assistant. Co-Operative Urban Municipal Higher Secondary School, Mannargudi,Thiruvarur District

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with OKEN Scanner

Padasalai

Scanned with OKEN Scanner